வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.07.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 232 | பக்கங்கள் : 16

## மக்களின் நலன் கருதி ஜனாதிபதி, பிரதமர் எடுக்கும் முடிவுக்கு ஆதரவு

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



கொழும்பு, ஜூலை 26

“நாட்டின் நலன் கருதி - எமது மக்களின் நலன் கருதி நல்ல கருமங்களை அவர்கள் முன்னெடுத்தால் அவற்றுக்கு நாம் பூரண ஆதரவை வழங்குவோம்” - இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

அத்துடன், “ராஜபக்ஷக்களோ அவர்களின் அணியினரோ எந்தவொரு காலத்திலும் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை

15

## போராட்டங்களின் விளைவால் ஐ. எம். எவ். ஒப்பந்தம் தாமதம்!

### அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஜூலை 26

அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் (ஐ. எம். எவ்) ஓகஸ்ட் மாதத்தில் கைச்சாத்திவிருந்த பணியாளர் மட்ட உடன்படிக்கை பிற்போடப்பட்டுள்ளது. அமைதிப் போராட்டங்கள் வன்முறைகளாக மாறியமையே இதற்கு காரணம் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர்,

போராட்டங்களால், கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் செய்யவிருந்த உலக உணவு திட்டத்தின் தலைவர், தனது பயணத்தை ஒரு

15

# பிளவடைகின்றது ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, ஜூலை 26

சர்வகட்சி அரசாங்கத்தில் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அரசாங்க தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பேச்சுக்களின்போது சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவியை வழங்கக் கோரியதாகவும் இதற்கு ரணில் விக்கிரமசிங்க மறுத்துவிட்டார் எனவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

15

## யாழ்ப்பாணத்தில் இன்று முதல் 50வீத தனியார் பஸ்களே ஓடும்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 50வீதமான தனியார் பேருந்துகளே சேவையில் ஈடுபடும் என்று யாழ். மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ. கெங்காதாரன் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய அலுவலகத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே

15

## பருத்தித்துறை இ. போ. சவினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு!

### இன்றும் போராட்டம் தொடரும்

வடமராட்சி, ஜூலை 26

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலை ஊழியர்கள் நேற்று அதிகாலை முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், இந்தப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமையும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இ. போ. சவின் யாழ்ப்பாண சாலையினர் நேற்று முன்தினம் முன்னெடுத்த

15

### பாடசாலைகள் நேற்று ஆரம்பம்!

## போக்குவரத்து நெருக்கடியால் மாணவர்கள் வருகை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 26

நாடு முழுவதும் பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகின. யாழ்ப்பாணத்திலும் பாடசாலைகள் ஆரம்பமானபோதிலும் மாணவர்களின் வருகை - குறிப்பாக நகர்ப்புற பாடசாலைகளில் குறைவாகவே காணப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை, பருத்தித்துறை சாலைகளின் ஊழியர்கள்

15

### காலிமுகத்திடல் போராட்டம்

## ‘பேஸ்புக்’கில் ஆதரவாக பதிவிட்டவருக்கு மறியல்!

கொழும்பு, ஜூலை 26

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் “பேஸ்புக்” பதிவை பகிர்ந்தமை மற்றும் பொலிஸாருக்கும் படையினருக்கும் எதிராக தீங்கிழைக்கும் கருத்துக்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபரான காலியைச் சேர்ந்த சந்தேக நபரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு சந்தேகநபர்

15

## பரவுகிறது ஒமைக்ரோன் வழிகாட்டலை பின்பற்றுக!

### சுகாதார அமைச்சு அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் கொரோனா வைரஸின் ஒமைக்ரோன் திரிபின் உப பிறழ்வு வேகமாகப் பரவி வருகிறது. எனினும், இது கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது என்று சுகாதார அமைச்சின் சிரேஷ்ட ஒருங்கிணைப்பாளர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும், கொரோனா மரணங்கள் மற்றும் தொற்றாளர் எண்ணிக்கையில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, மக்கள் மீண்டுமொரு கொரோனா அலை ஏற்படுத்துவதை

15

## அமைச்சு பதவி வேண்டாம் அதனால் பாதிப்பே ஏற்படும்!

### விக்னேஸ்வரன் எம். பி.

யாழ்ப்பாணம்,ஜூலை 26

“அமைச்சுப் பதவி எனக்குத் தேவையில்லை. அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டால் பெரிய பாதிப்பு எமக்கு ஏற்படும்.” என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், “தமிழ் மக்களுக்கு பொருளாதார ரீதியாக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பது சம்பந்தமாக சில கட்டமைப்புகளை அமைக்க உதவிகளை அரசாங்கத்திடம் இருந்து பெறவுள்ளேன்.” என்றும் கூறினார்.

சமகால நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“அமைச்சுப் பதவி எனக்குத் தேவையில்லை.

15

## சுமந்திரன், சாணக்கியன் எம்.பிக்கள் சீனத் தூதுவருடன் தனித்து சந்திப்பு!

கொழும்பு, ஜூலை 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் கடந்த வாரம் சீனத் தூதுவரை தனித்து சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என்று அறிய வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்திப்பதற்கு நீண்டநாட்களுக்கு முன்னரே சீனத் தூதரகம் அழைப்பு விடுத்திருந்தது. ஆனால், இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே கூட்டமைப்பின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் சீனத் தூதுவரை தனியாக சந்தித்துப் பேசினர் என்று தூதரக வட்டாரங்களை மேற்கோளிட்டு தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் நடப்பதற்கு ஒரு சில நாட்கள்

15

## இப்படியும் நடக்கிறது...!

பாராளுமன்றில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் வெளியே வந்த முன்னாள் பிரதமர் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்கொண்ட ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில்கள் பலரையும் ஆச்சரியப்படுத்தியிருக்கலாம்.

அப்போது பதில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரம சிங்க, ராஜபக்ஷக்களை காப்பாற்றுவதற்காகவே அதிகாரத் துக்குக் கொண்டுவரப்பட்டாரெனப் பலரும் குற்றச்சாட்டுக் களை முன்வைத்து வருகின்ற நிலையில், அவர் சர்வ இலாவக மாக, நாங்கள் டலஸ் அழகப்பெருமவையே முன்னிலைப் படுத்தினோம் - வாக்குமளித்தோம். ஆனால், என்ன செய்வது அவர் தோல்வியடைந்துவிட்டார் என்று மகிந்த ராஜபக்ஷ பதிலளித்தபோது பலரும் நகைச்சுவையாக அவர் பதிலளித்ததாகவே கருதியிருப்பர்.

ஆனால், அவர் மிகத் தெளிவாக ஒரு விடயத்தைச் சொல்லியிருக்கிறார் என்கிறார் அவரை நன்கு அறிந்த அரசியல் தலைவர் ஒருவர்.

மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு வெளியேறியிருந்தபோதிலும் அவர் அரசிய லில் இருந்து ஒதுங்கிவிடவில்லை என்பதை பல தடவைகள் சொல்லியும் - செயலில் காட்டியும் வருகின்றார்.

அவர் திருமலையில் இருக்கிறார், இப்போது பலாலியில் இருக்கிறார், அங்கிருந்து வெளிநாடொன்றுக்கு தப்பிச் செல்லவிருக்கிறார், அதற்கு அவரின் சகோதரர்- அப்போது பதவியிலிருந்த ஜனாதிபதியும் உதவுவார் என்று நமது மக்கள் பிரதிநிதி ஒருவர், சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு பேட்டிய ளித்த மறுநாள் பாராளுமன்றில் வந்து அமர்ந்தவர் இந்த மகிந்த.

இப்போது அவர் ஆட்சியில் இல்லை.

ஜனாதிபதியாக இருப்பவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்.

இப்போது இருக்கின்ற அமைச்சரவை தற்காலிகமானது தான். சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கவே ஜனாதி பதி ரணில் விரும்புகிறார் என்பதை அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட உடனேயே தெரிவித்துவிட்டார்.

அதற்கான முயற்சிகளும் பேச்சுக்களும், கட்சிகளிடையே கலந்துரையாடல்களும் நடந்துகொண்டிருப்பதை பலரும் உறுதிசெய்துவருகின்றனர்.

பாராளுமன்றம் கூடும்போது ஜனாதிபதி ரணில், உத்தியோகபூர்வமாக அதற்கான கோரிக்கையை மீண்டும் விடுக்கலாம். ஆனால், இந்த சர்வகட்சி அரசாங்கத்தில் மகிந்த தரப்பு உள்வாங்கப்படுமா? அல்லது அதில் மகிந்த தரப்பு பங்குபற்றுமா என்பது இன்னமும் தெரியவரவில்லை.

மகிந்த தரப்பை உள்வாங்கினால் அதனை வெளியே காத்துக்கொண்டிருக்கும் போராட்டக்குழுவினர் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. மகிந்த தரப்பு உத்தியோகபூர்வ மாக ஒருவரை சர்வகட்சி அரசுக்கு நியமிப்பதென்றால், அவர்களில் மகிந்தவை தவிர்த்து ஒருவர் இருக்கப்போவ தில்லை. அப்படியெனில் என்ன நடக்கும், அந்த அரசாங் கத்தில் இடம்பெறுகின்ற எவரும் பொதுஜன பெரமுனவின் உத்தயோகபூர்வ பிரதிநிதிகளாக இருக்கப்போவதில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி அந்த அரசாங்கத்தில் இடம்பெற மறுத்தாலும் அங்கிருந்து சுமார் பத்துப் பேர் புதிய அரசில் இணைவதற்கு தயாராக இருக்கின்றனர் எனக் கூறப்படும் நிலையில் அதிலிருந்து ஒரு பிரிவினர் வெளியேறி அரசில் இணைவர்.

ஆக, அந்த அரசு சர்வகட்சி அரசாங்கம் இல்லாவிட்டா லும் சர்வகட்சிகளையும் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கமாகத்தான் இருக்கப்போகின்றது.

அதாவது பிரதான கட்சிகள், உத்தியோகபூர்வமாக இணையாவிட்டாலும் அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் இணைந்திருப்பர்.

அவ்வாறு இருக்கின்றபோது மகிந்தரும் அவரின் விசுவாசிகள் சிலரும் பொதுஜன பெரமுனவின் உண்மை யான பிரதிநிதிகள் தாங்களே என்றும், தாங்களே உண்மை யான எதிர்க்கட்சி என்றும் உரிமை கோரலாம்.

ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக அரசில் சேராமல் இருந்து கொள்கின்றபோதிலும், அதன் உறுப்பி னர்கள் கட்சியின் விருப்பத்துக்கு மாறாகவே அரசில் இணைந்து கொண்டிருப்பதாக கூறப்போவது போலவே, பொதுஜன பெரமுனவும் அரசில் உத்தியோகபூர்வமாக இணையவில்லை என்றும் ஆனால், அதன் உறுப்பினர்கள் சிலரே கட்சியின் விருப்பத்திற்கு மாறாக அரசுடன் இணைந்திருப்பதாகவும் அவர்களும் கூறலாம்.

அப்படியொரு நிலை வருகின்றபோது, மகிந்த தன்னோடு இருக்கின்ற உறுப்பினர்களுடன் தானே உண்மையான எதிர்க்கட்சி என்றும் உரிமைகோரலாம் என்கிறார் அவரை நன்கு அறிந்த அந்த அரசியல் தலைவர்.

அப்படியொரு நிலை ஏற்பட்டால், மகிந்தரின் மற்று மோர் அரசியல் 'இனிங்ஸ்' தொடங்குமோ என்னவோ?!

- ஊர்க்குருவி

# மாற்றுப்பாலின சமூகம் தொடர்பில் யாழ். பல்கலையில் விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

மாற்றுப்பாலின சமூகத்தின ருக்கு எதிரான ஒடுக்குமுறை களை கண்டித்தும் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் முகமாக வும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பேரணியொன்று இடம்பெற்றது.

நேற்று மதியம் 2 மணியள வில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்த பேரணி பல்கலைக்கழக பிரதான நுழை வாயில் ஊடாக சென்று விஞ் ஞான பீட நுழைவாயிலுடாக பல்கலைக்கழகத்துக்குள் சென்று நிறைவடைந்தது.

பேரணியில் யாழ். பல்க லைக்கழக துணைவேந்தர், பல் கலைக்கழக விரிவுரையாளர் கள், பல்கலைக்கழக மாணவர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பேரணியின் நிறைவில் மாற் றுப்பாலின சமூகத்தினர் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆற்றுகை யொன்றும் இடம்பெற்றது. (ஐ)

# அனைத்துப் போராட்டங்களையும் இரு வருடங்களுக்கு நிறுத்துங்கள்!

## கோட்டை விகாரையின் தேரர்

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் முன்னெடுக்கப் பட்டுவரும் அனைத்து வகை யான போராட்டங்களையும் இரு ஆண்டுகளுக்காவது நிறுத்தி, ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனப் போராட் டக்காரர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் கோட்டை விகா ரைப் பிரிவின் பதிவாளரான பெல்பொல விபஸ்சி தேரர்.

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க, நேற்று முன்தினம் மாலை சேதவத்த, வெஹெர கொடை புராதன விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட் டார்.

அந்தவேளையில் அனுசாசன உரையாற்றிய பெல்பொல விபஸ்சி தேரர் தேரர்,

நாட்டில் 30 வருடங்களாக நீடித்த போரை மகிந்த ராஜ பக்ஷவும், கோட்டாபய ராஜ பக்ஷவும் முடிவுக்கு கொண்டு வந்ததால்தான் இன்று சுதந்திர மாகப் போராட முடிகின்றது என்பதை மறந்துவிட வேண் டாம்.

ஜனாதிபதிக்கு ஆலோசகர் கள் எவரும் தேவையில்லை, எல்லாம் அறிந்த சிறந்த விமா னியே. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொறு மையும், தூரநோக்கு சிந்த னையுமே அவரின் தலை மைத்துவத்துக்கான ஆபரண மாகும். இந்நாட்டில் ஒழுக்க மும், பொறுமையும் இல்லை. பிரச்னைகளை ஒரே தடவை யில் தீர்த்துவிட முடியாது. எனவே, இந்நாட்டை முன்னெ டுப்பதற்கு ஜனாதிபதிக்கு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும். அவர் முறையாக செயல் படா விட்டால் போராடலாம்.

மகிந்த ராஜபக்ஷ விரட்டி யடிக்கப்பட்டார், கோட்டாபய ராஜபக்ஷவும் விரட்டியடிக் கப்பட்டார். இப்படி வருகின்ற எல்லா தலைவர்களையும் விரட்டியடித்தால் நாட்டை ஆள்வது யார்? போராட்டங் கள் மூலமே நாட்டை குழப்ப முயற்சிக்கப்படுகின்றது. எனவே, அனைத்து போராட் டங்களையும் இரண்டு வருடங் களுக்காவது நிறுத்தப்பட வேண்டும்." -எனவும் தேரர் குறிப்பிட்டார்.

(ஐ)

# இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக தமிழகம் சென்ற வெளிநாட்டவர் கைது

சென்னை, ஜூலை 26

இலங்கையில் இருந்து கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் தமிழகத்துக்கு சென்ற போலாந்து நாட்டை சேர்ந்த வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரி டம் முன்னெடுக்கப்பட்ட விசா ரணைகளில் அவர் இலங்கை யில் குற்றச்செயல் ஒன்றுடன் தொடர்புடைய குற்றத்தில் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்து , தண்டனைக் காலம் முடிவடைந்து விடுதலை செய்யப்பட்டவர் என தெரிய வந்துள்ளது.

தமிழகம் வேதாரண்யம் அருகே முனங்காடு பகுதியில் அநாதரவான நிலையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை படகொன்று மீட்கப் பட்டது. அந்தப் படகானது காற்று அடித்து (பலூன் போன்று) பாவிக்க கூடிய படகு ஆகும். அதில் இருவர் பயணம் செய்ய கூடியவாறு வடிவமைக் கப்பட்டுள்ளது.

சுழியோடிகள் பாவிக்கும் காலணி , படகுக்கு காற்று நிரப் பும் பம் , ஜக்கெட், சுழியோடி கள் கடலினுள் பாவிக்கும் கண் ணாடிகள் , 18இற்கும் மேற் பட்ட தண்ணீர் போத்தல்கள், மிதக்கும் பைகள் என படகுக்கு அருகில் இருந்து சில பொருட் கள் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்தே இந்த படகின் மூலம் தமிழகத்தி னுள் ஊடுருவி இருக்கலாம் என தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் சந்தேகம் கொண்டு, கடலோர பாதுகாப்பு பிரிவி னர், கியூ பிரிவினர் எனப் பல வேறு பட்ட தரப்பினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத் தனர்.

அந்தப் பகுதிகளில் மோப்ப நாய்களின் உதவி, ட்ரோன் கம ராக்கள் மூலம் தீவிர கண் காணிப்பில் ஈடுபட்டதுடன் , விசாரணைகளையும் முன்னெ டுத்தனர்.

இதன்போது , வேதாரண் யம் பகுதிக்கு அருகில் உள்ள காட்டு பகுதியில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடு வதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் அவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசார ணைகளில் அவர் போலாந்து நாட்டை சேர்ந்தவர் என தெரிய வந்ததை அடுத்து இலங்கையில் இருந்து கடவுச்சீட்டு இன்றி சட்டவிரோதமான முறையில் தமிழகத்தினுள் ஊடுருவினார் என குற்றம் சுமத்தி மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 26

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத் தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடை பெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் நடைபெறும் இந்த நிகழ் வில் தலைமை உரையை பரி பாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் 'ஆடி மாதமும் சைவ வாழ்வி யலும்' என்ற தலைப்பில் ஆற்று வார். (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 21

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் நெருக்கடிகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த் தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசை யில் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப் பாணம் - சங்கானை நிகரையம் பதி சாமுண்டாதேவி சமேத அருள்மிகு ஞானவைரவர் கோவிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சந்திர ஜனார்த்தன சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தமிழ் சேவையில் நேரடி யாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.07.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சி?

ராஜபக்ஷக்களை அகற்றுதல் என்னும் அடிப்படையில் ஆரம்பித்த போராட்ட நடவடிக்கை வெற்றிபெற்றிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து, அரசியலமைப்புக்கு அமைவாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கின்றார். இந்த நிலையில், போராட்டக்காரர்களில் ஒரு குழுவினர், ரணில் விக்கிரமசிங்கவையும் வெளியேறுமாறு கோருகின்றனர். இந்தப் பின்னணியில், அடுத்த மாதம், ஒன்பதாம் திகதி, ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட நிலைமைதான், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நிகழுமென்று, ஜே. வி. பி. தலைவர் தெரிவிக்கின்றார். ஜே. வி. பியும் ஏனைய இடதுசாரி குழுக்களும் உண்மையிலேயே எதனை அடைய முயற்சிக்கின்றன?

நடந்துமுடிந்த பாராளுமன்ற வாக்கெடுப்பின்போது, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட, அநுரகுமார திஸநாயக்க, மூன்று வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். உண்மையில் போராட்டத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருமே, அவருக்கு ஆதரவு வழங்கியிருக்கவில்லை. போராட்டக்காரர்கள் மத்தியில் உரையாற்றியிருந்த பொன்சேகாகூட அநுரவை ஆதரிக்கவில்லை. ஏன்? போராட்டக்காரர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிக்கவில்லை. இந்த நிலையில், அரசியலமைப்புக்கு அமைவாக வெற்றிபெற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை வெளியேறக் கோருவது எந்த வகையில் சரியானது?

போராட்டக்காரர்களின் கோரிக்கைகக்கு அமைவாக ஒவ்வொரு விடயங்களும் இடம்பெற வேண்டுமாயின், இலங்கைத் தீவை அவர்கள் முழுமையாகக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்களா என்னும் கேள்வியே எழுகின்றது. ஜே. வி. பி. போன்ற கிளர்ச்சிப் பின்புலம் கொண்ட, ஒரு கட்சியால் ஒரு போதும் ஜனநாயக வழிமுறையால் இலங்கையில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. இது பல தடவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் தற்போது ரணிலுக்கு எதிரான நடவடிக்கைகளை தூண்டிவிடுவதன் மூலம் இவர்கள் உண்மையிலேயே என்ன செய்ய முயற்சிக்கின்றனர்?

ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரத்திலிருந்து அகற்ற வேண்டுமாயின், அடுத்த தேர்தல் மூலம் அதனை செய்ய முடியும். அதேவேளை, ராஜபக்ஷக்களை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து வேரோடு பிடுங்கியெறிய வேண்டுமாயின் போராட்டக்காரர்கள் கிராமங்கள் தோறும் சென்று, பிரசாரங்களை முன்னெடுத்து, எஞ்சியிருக்கும் அரசியல் செல்வாக்கையும் இல்லாமலாக்கலாம். ராஜபக்ஷக்களின் குடும்பத்திலிருந்து மீண்டும் ஒருவர் வராத வகையில் அவர்களை தோற்கடிக்கும் முயற்சிகளில் போராட்ட இளைஞர்கள் ஈடுபடலாம். அவர்களே தேர்தலில் போட்டியிடவும் முடியும். இதனை மேற்கொள்வதற்கு அவர்கள் மக்களை நோக்கிச் செல்ல வேண்டும். அவ்வாறில்லாது, காலிமுகத்திடலில் தரித்திருந்து, ஜனநாயக முறைமையின்படி இடம்பெறும் விடயங்களை தவறென்று கூறிக்கொண்டிருப்பது நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க ஒருபோதும் பயன்படாது.

போராட்டக்காரர்கள் கூறும் மாற்றங்களை தற்போதிருக்கின்ற ஜனநாயக முறைமையின்படிதான் செய்ய முடியும். அதற்கு மாறாக ஒரு விடயத்தை சாதிப்பதாயின், கிளர்ச்சியின் மூலம் கொழும்பைக் கைப்பற்றுவதன் மூலம் மட்டும்தான் அவர்களின் எதிர்பார்ப்பை முன்னெடுக்க முடியும். அவ்வாறான முயற்சிகள் இடம்பெறும்போது, இராணுவம் அதனை அனுமதிக்காது. உத்தரவின் அடிப்படையில் இராணுவம் செயல்படும் நிலைமையே ஏற்படும். அவ்வாறு நிகழுமாயின் நாடு மீண்டும் வன்முறை அரசியலுக்குள் தள்ளப்படும். இதனால் மக்களுக்கு கிடைக்கப்போவது என்ன?

ஒரு சில குழுக்கள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதற்காக இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வது பாரதூரமான சிக்கல்களையே ஏற்படுத்தும். நிச்சயம், மீளவும் முன்னரைப் போன்று, விடயங்கள் இடம்பெறுமாயின், அரசாங்கம் முன்னரைப் போன்று அமைதியாக இருப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. விமல் வீரவன்ஸ கூறுவது போல், வெளிநாட்டு படைகள் இலங்கைத் தீவுக்குள் காலூன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# 83 ஜூலையில் அதிர வைத்த அக்குண்டோசை !

**அனந்த பாலகிட்ணர்**

**1983**ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி பின்னிரவுவேளை வீட்டில் இரவு உணவை முடித்துக்கொண்ட பின்னர் வெளியே முற்றத்தில் படுக்கைக்குப் போவதற்கு முன்பதாக சற்று நேரம் காலாற நடந்துகொண்டிருந்த போது அந்தப் பயங்கர ஓசையை என்னால் கேட்க முடிந்தது.

திருநெல்வேலியில் அந்தப் பின்னிரவு வேளை கேட்ட அந்தக் குண்டோசையின் பயங்கர எதிரொலி ஒரு மாபெரும் அனர்த்தத்துக்கு கட்டியம் கூறுவதாகவே அமைந்திருந்தது.

இதனையடுத்து நான் மட்டுமல்ல. எனது அயலிலிருந்தவர்கள் அனைவருமே வீதிக்கு வந்து அப்பயங்கர ஓசை எங்கிருந்து வந்திருந்தது. என்ன அனர்த்தம் நடந்ததோ என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்த போது திருநெல்வேலிப் பக்கத்திலிருந்து எனது இல்லம் அமைந்துள்ள கொக்குவில் புகையிரத வீதிப்பக்கமாக ஏராளமானோர் பரபரக்க வேகமாக கால் நடையாகவும் சைக்கிள்களிலும் ஓடி வருவதைக்கண்டேன்.

அவ்வாறு வந்தவர்கள் வீட்டுக்கு வெளியே நின்றவர்களை நோக்கி உள்ளே போங்கள். ஆமிக்காரர்கள் வந்து தொலைக்கப் போகிறார்கள் என்று கத்தியபடியே சென்று கொண்டிருந்தனர். அச்சமயம் கால்நடையாக விரைந்து வந்த ஒரு முதியவரிடம் என்ன சத்தம்? ஏன்ன நடந்தது? என்று கேட்டேன். அப்போது அந்த முதியவர் நடந்தவற்றை கூறினார்.

“ஆமி டிரக் வண்டியொன்றின்மீது கண்ணி வெடித்தாக்குதல் நடத்தப்பட்டுவிட்டது. பலத்த சேதமாக இருக்குமென்றே நினைக்கிறேன். ஒரு தேவையில்லாத வேலை. இனி பலாலியிலிருந்து வந்து எல்லோரையும் கொல்லப் போகிறார்கள்“ என்று கூறிய அந்த முதியவர் கொக்குவில் பகுதியிலுள்ள தனது உறவினரின் வீட்டில் சென்று அந்த இரவைக் கழிக்கப்போவதாக சொல்லியபடியே விரைந்து நடந்து கொண்டிருந்தார். அத்து டன், என்னை நோக்கி “ தம்பி வீட்டுக்குள்ளே போயிரு. ஆமிக்காரர்கள் வந்து எங்கே என்ன செய்வார்களோ தெரியாது என்று” என்னையும் எச்சரித்தபடி அவர் சென்றுகொண்டிருந்தார்.

இதன்பின்னர் சில மணிநேரத்தில் பட்டாசுகள் வெடிப்பது போல வெடிச்சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்க ஆரம்பித்தன.

அன்றிரவு முழுவதும் வீட்டுக்காரர்கள் அனைவரும் விழித்திருந்தவாறு என்ன, எது நடக்குமோ என்ற அச்சத்துடன் இரவுப் பொழுதைக்கழித்தோம். சற்று நேரத்தில் பீதியடைய வைத்த அந்தத் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் ஓயந்தன.

இதனையடுத்து மறுநாள் காலை எனது சைக்கிளில் திருநெல்வேலி சந்தியை நோக்கிச் சென்றேன். அச்சந்தி காலை வேளையில் திருநெல்வேலிச் சந்தைக்கு வருவோர் போவோரினால் ஆரவாரமாகவே இருக்கும். ஆனால், அன்று அக்காலை வேளையில் ஒரு பயத்தோடு கூடிய பரபரப்புடனேயே அனைவரும் நின்றிருந்தனர். திருநெல்வேலிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகரை நோக்கிய திசையில் இரு நூறு மீற்றர் தொலைவிலேயே பெரும் கண்ணி வெடிச்சம்பவமொன்று நிகழ்ந்திருந்தது.

திருநெல்வேலி சந்தியில் நின்றிருந்தோர் கூறிக்கொண்டிருந்த தகவல்கள் மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தன. முதல் நாளிரவு இடம்பெற்ற கண்ணி வெடி தாக்குதலையடுத்து ஸ்தலத்துக்கு பலாலியிலிருந்து விரைந்து வந்த ஆமிக்காரர் மனம்போன போக்கில் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கருகே இருந்த வீடுகளை இலக்கு வைத்திருந்தனர். இதனால் முற்றத்தில் நின்றோர், யன்னல் வழியாக பார்த்தோர் எனச்சிலர் கொல்லப்பட்டிருந்தனர்.


இதன்பின்னர் எனது கடமைக்காக “ஈழநாடு” அலுவலகம் நோக்கி சென்றேன். அப்போது ஒரு பத்திரிகை அலுவலகம் அச்சம்பவத்தோடு எவ்வாறு பரபரப்படைந்திருக்கும் என்று கூறித்தெரிய வேண்டியதில்லை.

திருநெல்வேலி சந்தியில் கொல்லப்பட்ட 13 படையினரின் இறுதிச்சடங்குகள் கனத்தை பொது மயானத்தில் இடம்பெற்றதையடுத்து கொழும்பில் ஜூலை 25ஆம் திகதி இனக்கலகம் மிகப்பயங்கரமாக வெடித்திருந்தது.

விசேட கப்பல்களும், விமானங்களும் கொழும்பிலிருந்த யாழ்ப்பாண மக்களை ஏற்றியவாறு யாழ்ப்பாணம் வர ஆரம்பித்தன. இந்தியாவும் சிதம்பரம் என்ற தனது ஆடம்பர கப்பலை தந்துதவி அதில் எம்மவர்களை பக்குவமாக யாழ்ப்பாணம் வந்து சேர உதவியிருந்தது. ஈழநாடு கொழும்பு அலுவலக செய்தியாளராக இருந்த இ. கந்தசாமியும் சிதம்பரம் கப்பலில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இதற்கு முன்பதாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாண பயணிகளை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறைக்கு முதலாவதாக வந்த கப்பலில் முதலாவதாக வந்திறங்குகின்ற அகதிப்பயணியிடம் ஏதாவது கேட்டு எழுதுமாறு என்னை படப்படிப்பாளர் எஸ். தேவராஜாவுடன் செல்லப் பணித்தார் பிரதம ஆசிரியர் என். சபாரத்தினம். நானும் காங்கேசன்துறை கடற்கரைப் பகுதிக்கு சென்றேன். அப்போது அங்கு நங்கூரமிட்டிருந்த சரக்கு கப்பலிலிருந்த சிறு படகில் வந்த ஒருவர் கரைக்கு சற்று தொலைவிலேயே தண்ணீரில் கீழிறங்கி தனது பயணப்பெட்டியோடு கரை நோக்கி நடந்து வந்தார். தம்மையறியாமலேயே புலம்பியபடி வந்தவர் “சொல்வதற்கு ஒன்றுமில்லை. கொழும்பில் எங்களுடைய மக்களுக்கு பெருஞ்சேதம்“ என்று மட்டும் கூறினார். படப்படிப்பாளர் தேவராஜாவிடம் முடியுமானவரை படங்களை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். மறுநாள் படங்களே கதை சொல்லும் விதத்தில் ஈழநாடு பத்திரிகையில் ஒரு பக்கத்தை எனது சிறு கட்டுரையோடு வெளிவரச்செய்திருந்தேன். கறுப்பு ஜூலை 83 சம்பவங்களோடு செய்திகளுக்கு பஞ்சமிருக்கவில்லை. ஈழநாடு பத்திரிகையும் களைகட்ட ஆரம்பித்திருந்தது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**
புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள். நன்மையான நாள்.திட்டமிட்டு செயல்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். பணியிடத்தில் உங்களுக்கு மதிப்பு அதிகரிக்கும்.

**இடபம்**
மதியம் வரை குழப்பம் நீடிக்கும். அதன்பின் முயற்சிகள் பலிதமாகும்.அரசு வழியில் எதிர்பார்த்த நன்மைகளை மதியத்திற்கு மேல் அடைவீர்கள். சங்கடங்களை தாண்டி நினைத்ததை அடைவீர்கள்.

**மிதுனம்**
அலைச்சல் அதிகரிக்கும். அதன் முயற்சி வெற்றியாகும்.செயலில் மட்டும் கவனம் செலுத்துங்கள். விருப்பம் ஒன்று நிறைவேறும். விழிப்புடன் செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள்.

**கடகம்**
மதியம் வரை எதிர்பார்ப்பு நிறைவேறும். அதன்பின் செலவுகள் அதிகரிக்கும்.எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். மதியத்திற்கு மேல் அலைச்சல் அதிகரிக்கும். எண்ணம் நிறைவேறும்.

**சிம்மம்**
தடைபட்டிருந்த வருவாய் வந்து சேரும். சேமிப்பு உண்டாகும். தொழிலில் இருந்த பிரச்னைகள் விலகும். பணவரவு அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். நிதிநிலை உயரும்.

**கன்னி**
நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். உங்களுடைய செயல்களில் வேகம், விவேகம் இருக்கும்.சோர்வு விலகி உற்சாகமாக செயல்படுவீர்கள். அதிரடியாக செயல்பட்டு அதிர்ஷ்டம் காண்பீர்கள்.

**துலாம்**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களின் கோரிக்கை நிறைவேறும். அதிகாரிகளின் உதவி கிடைக்கும். நண்பர்கள் ஆதரவுண்டு.

**விருட்சிகம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி மதியத்திற்கு மேல் விலகும். செயல்களில் இருந்த தடை விலகும். முயற்சி மதியத்திற்கு மேல் நிறைவேறும். தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள்.

**தனுசு**
உங்கள் செயல்களில் சாதகமான நிலையை காண்பீர்கள்.மதியத்திற்கு மேல் சந்திராஷ்டமம் தொடங்குவதால் செயல்களில் கவனம் தேவை.மதியம் வரை சாதகங்களை அடைந்தாலும் சங்கடம் வரலாம்.

**மகரம்**
துணிச்சலால் நினைத்ததை சாதிப்பீர்கள். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும்.எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். முயற்சி ஒன்று நிறைவேறும். உங்கள் செயலில் லாபம் காண்பீர்கள்.

**கும்பம்**
அரசு வழியில் எதிர்பார்ப்பு நிறைவேறும். பகைவர் தொல்லை விலகும்.உங்கள் மீது ஏற்பட்ட பழி விலகும். மறைமுக எதிரியை கண்டு விலகுவீர்கள். அரசு வழியில் அனுகூலம் உண்டாகும்.

**மீனம்**
மதியத்திற்கு மேல் நெருக்கடி வரலாம். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.பணிகளில் கவனம் தேவை. அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள். பணியில் சகஊழியர் ஆதரவால் பிரச்னையில் இருந்து வெளி வருவீர்கள்.

# கச்சதீவை இந்தியா மீட்குமா? வைகோவுக்கு அமைச்சர் பதில்!

*புதுடில்லி, ஜூலை 26*

தமிழக மீனவர்களின் உரிமையைக் காக்க கச்சதீவு மீட்கப்படுமா? என்று வைகோ எழுப்பிய கேள்விக்கு வெளியுறவுத்துறை இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து ம. தி. மு. க. பொதுச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ எழுப்பிய கேள்விகள்,

1. பாக்கு நீரிணையிலுள்ள கச்சதீவின் உரிமை மற்றும் மீன்பிடி உரிமையை மீட்டெடுப்பதற்காக, பிரதமர் சமீபத்தில் சென்னைக்கு வருகை தந்தது உட்பட, பல சந்தர்ப்பங்களில் தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிறதா? 2. அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அதற்கான பதில்

3. இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு கைது செய்யப்படுவதைக் கருத்தில் கொண்டு, கச்சதீவை மீட்பதற்காக இலங்கையுடன் இந்தியா பேச்சுக்களை நடத்துமா? 4. அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இதற்கு பதில் அளித்துள்ள வெளியுறவுத்துறை இணை அமைச்சர்

(1) முதல் (4) வரை உள்ள கேள்விகளுக்கான பதில்:

இந்திய அரசாங்கம் 1974 மற்றும் 1976இல் இலங்கையுடன் கடல் எல்லை ஒப்பந்தங்களை மேற்கொண்டது. ஒப்பந்தங்களின் கீழ், கச்சதீவு இந்தியா - இலங்கை சர்வதேச கடல் எல்லைக் கோடு இலங்கைப் பக்கத்தில் உள்ளது.

தற்போது, கச்சதீவு விவகாரம் தொடர்பான வழக்கு, இந்திய உச்ச நீதிமன்றத்தில் உள்ளது.

இராஜதந்திர வழிகளில் நிறுவப்பட்ட வழிமுறைகள் மூலம் இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்னைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன -இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மாநிலங்களவை உறுப்பினராக இளையராஜா பதவியேற்றார்!

*புதுடில்லி, ஜூலை 26*



மாநிலங்களவை உறுப்பினராக இசையமைப்பாளர் இளையராஜா நேற்று திங்கட்கிழமை பிற்பகல் பதவியேற்றார்.

நேற்று நடந்த மாநிலங்களவை கூட்டத்தில் அவையின் துணைத் தலைவர் முன்பாக தமிழில் உறுதிமொழி ஏற்று அவர் உறுப்பினராகப் பதவியேற்றார்.

இசையமைப்பாளர் இளையராஜா மாநிலங்களவை உறுப்பினராக அண்மையில் அறிவிக்கப்பட்டார். மாநிலங்களவை உறுப்பினர்கள் கடந்த 18 ஆம் திகதி பதவியேற்றனர். ஆனால், அமெரிக்காவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க சென்றதால், இளையராஜாவால் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை எனத் தகவல் வெளியானது. இந்த நிலையிலேயே இளையராஜா நேற்று பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.

# பழனிசாமியின் முறைகேடு வழக்கை விசாரிக்க உச்சநீதிமன்றம் அனுமதி!

*சென்னை, ஜூலை 26*

முன்னாள் முதல்வரும், அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி மீதான நெடுஞ்சாலைத்துறை கேள்விகோரல் முறைகேடு வழக்கை விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

அ. தி. மு. க. ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறை கேள்விகோரல்களை பழனிசாமியின் உறவினர்களுக்கு வழங்கியதில் 4,000 கோடி இந்திய ரூபாய் வரை முறைகேடு நடந்திருப்பதாக தி. மு. க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், சி. பி. ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, 2018இல் சி. பி. ஐ. விசாரணைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பழனிசாமி தொடர்ந்த வழக்கில் விசாரணைக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள வழக்கை உடனடியாக விசாரிக்கக் கோரி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி முன்பு தமிழக அரசு தரப்பில் நேற்று திங்கட்கிழமை முறையிடப்பட்டது.

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்ற நீதிபதி, முறைகேடு வழக்கு விரைவில் விசாரணைக்கு பட்டியலிடப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

# மக்கள் பணத்தில் கருணாநிதிக்கு நினைவுச் சின்னம் அமைப்பதா?

## விஜயகாந்த் எதிர்ப்பு

*சென்னை, ஜூலை 26*

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு மக்கள் வரிப் பணத்தில் பேனா வடிவிலான நினைவு சின்னம் அமைக்க கூடாது என்று தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: தி. மு. க. அரசின் நிர்வாக சீர்கேட்டால் விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு, வேலைவாய்ப்பின்மை என தமிழக மக்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு சென்னைமெரினா கடலில் 134 அடி உயரத்தில் 80 கோடி (இந்திய) ரூபாய் செலவில் பிரம்மாண்ட பேனா வடிவிலான நினைவுச் சின்னத்தை தமிழக அரசு அமைப்பதால் யாருக்கு என்ன இலாபம்.

இதற்கு செலவு செய்யும் பணத்தை உள்கட்டமைப்பு வசதி, சாலை வசதி, கல்வி வளர்ச்சி, தொழில் துறை வளர்ச்சி, விவசாய வளர்ச்சிக்கு பயன்படுத்தி தமிழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்றால் மக்கள் அதை வரவேற்பார்கள்.

ஏற்கெனவே தமிழகத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை, சென்னையில் வள்ளுவர் கோட்டம் போன்ற பல நினைவுச் சின்னங்கள் இருக்கும் நிலையில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அவசியமற்றது.

நினைவுச் சின்னம் வேண்டும் என்றால், மக்கள் வரிப் பணத்தை வீணடிக்காமல், தி. மு. க. அறக்கட்டளைக்கு சொந்தமான பணத்தைவைத்து நினைவுச் சின்னத்தை அமைத்துக் கொள்ளட்டும் -என்றுள்ளது.

# இ. போ. ச. யாழ். சாலையினரின் புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது!

**யாழ்ப்பாணம், ஜுலை 26**

**யாழ்ப்பாணம் இ. போ. ச. சாலை ஊழியர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு நேற்று மதியத்துடன் முடிவுக்கு வந்துள்ளது.**

கல்கமுவை இ. போ. ச. சாலை முகாமையாளர் மற்றும் 3 ஊழியர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து, பணிப்புறக்கணிப்பை கைவிடுவதாக இ.போ.ச யாழ். சாலை ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற இ. போ. ச பேருந்தை வழிமறித்த குழுவொன்று, சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்தியிருந்தது.

கல்கமுவ சாலையிலிருந்து சென்ற சாலை முகாமையாளர் உள்ளிட்ட சுமார் 15 இ.போ.ச. பணியாளர்களே இந்த தாக்குதலை நடத்தியிருந்தனர். சாலைப் பதிவேட்டின்படி குறிப்பிட்ட குழுவினர் மரண வீடொன்றுக்கு செல்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மரணவீட்டில் மது அருந்திய பின்னர், இந்த தாக்குதலில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

தாக்குதலாளிகளை கைது செய்ய வலியுறுத்தி நேற்று முன்தினமும் நேற்றும் யாழ். சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.




நேற்று முன்தினம் இரவு 3 ஊழியர்களை கைது செய்ததாகவும், பணிப்புறக்கணிப்பை கைவிடுமாறும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், சாலை முகாமையாளர் கைது செய்யப்படும் வரை பணிப்புறக்கணிப்பை கைவிட மாட்டோம் என இ.போ.சவினர் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, நேற்று பகல் கல்கமுவ சாலை முகாமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதனால், பணிப்புறக்கணிப்பை கைவிடு வதாக இ.போ.ச யாழ் சாலை ஊழியர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)



# இ. போ. ச. வவுனியா சாலையினர் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில்!

*வவுனியா, ஜுலை 26*

இலங்கை போக்குவரத்து சபை வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

உதவி சாலை முகாமையாளர் (பொறியியல்) மாற்ற கோரியும் ஊழியர்களுக்கான பெற்றோலை சீரான முறையில் வழங்கக் கோரியுமே இந்த பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது.

இதனால், இபோ.ச வவுனியா சாலைக்குரிய பேருந்துகள் நேற்று சேவையில் ஈடுபடவில்லை. நேற்று பாடசாலைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இந்தப் போராட்டத்தால் மாணவர்கள், ஆசிரியர்களும் மற்றும் அரச, தனியார் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். (ஐ)




# வன்னி மாவட்ட பாடசாலைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின!

*வவுனியா, ஜுலை 26*

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகள் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகின.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அசாதாரண நிலை காரணமாக நாடு பூராகவும் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.

இந்நிலையில் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகளில் கல்வி செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

அத்துடன் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீடுகளிலிருந்தோ அல்லது இணைய வழி கற்றல் செயல்பாடுகள் மூலமாகவோ கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சால் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் நேற்று பாடசாலைகள் ஆரம்பமாகின. முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் பாடசாலைகள் வழமை போன்று ஆரம்பமாகின. எனினும் வவுனியா மாவட்டத்தில் இ. போ. ச. பஸ் சேவை இடம்பெறாததால் மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். இதனால், மாணவர்கள், ஆசிரியர்களின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது. (ஐ)

# எரிபொருள் நிலையத்தில் குழப்பம் வேப்பங்குளத்தில் ஏழு பேர் கைது!

*வவுனியா, ஜுலை 26*

வவுனியா, வேப்பங்குளத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வேப்பங்குளத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சனிக்கிழமை மாலை முதல் ஞாயிறு அதிகாலை வரை எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

வாகன இலக்கதகடுகளின் கடைசி இலக்கமான 0,1,2 ஆகிய இலங்க மோட்டர் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், கார்கள் என்பவற்றுக்கு எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

இந்நிலையில், எரிபொருள் பெறுவதற்கு செல்லுமிடத்தில் வாகனங்கள் கூடியமையால் வரிசையில் நின்றோருக்கும், ஏனையோருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு அமைதியின்மை நிலவியது.

சம்பவ இடத்திற்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் அமைதியின்மை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 7 பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# கத்தியுடன் வந்த இளைஞர் அச்சுவேலியில் கைதானார்!

*யாழ்ப்பாணம், ஜுலை 26*

அச்சுவேலியில் உள்ள வீடொன்றில் திருட்டில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் ஊரவர்களால் பிடிக்கப்பட்ட இளைஞனிடம் இருந்து சிறிய ரக கத்தி மற்றும் ஓடிக்கொலன் போத்தல் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி - பத்தமேனி பகுதியில் வீட்டில் தனியே வசிக்கும் பெண்ணொருவரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்ற இளைஞர் வளவை துப்புரவு செய்துவிட்டு அதற்கான கூலியையும் வாங்கி சென்றுள்ளார்.

இதன்பின்னர் வீட்டிலிருந்த பெறுமதியான இரு கைபேசிகள் காணாமல் போயின என்று அந்த வீட்டின் பெண்மணி அயலவர்களிடம் கூறியுள்ளார். இது தொடர்பில் அந்த இளைஞர்மீது சந்தேகப் பார்வை விழுந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அந்த இளைஞர் சாப்பாட்டு பார்சல் ஒன்றுடன் அந்த பெண்மணியின் வீட்டுக்கு வந்துள்ளார். அவரை ஊரவர்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.

அவரை விசாரித்தபோது, வீட்டில் தனியாக இருந்த பெண்மணி தனியாக இருப்பதால் அவருக்கு பாதுகாப்பாக இருக்க வந்தார் என்றும் கைபேசிகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் கூறியுள்ளார்.

அவரை ஊரவர்கள் பரிசோதித்தபோது அவரின் உடைமையில் இருந்து சிறிய ரக கத்தி, ஓடிக்கொலன் என்பவை மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்து அந்த இளைஞர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

# இரவில் சைக்கிளில் பயணிப்போர் டைனமோ பொருத்துவது கட்டாயம்!

*வவுனியா, ஜுலை 26*

வவுனியாவில் சைக்கிள்களில் இரவு நேரத்தில் பயணிப்போர் டைனமோ வெளிச்சம் பொருத்துவது கட்டாயம். அத்துடன், வீதி விதிகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரோஷன் சந்திரசேகர அறிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்னையால் வவுனியா மாவட்டத்திலும் சைக்கிள் பாவனைகள் வெகுவாக அதிகரித்துள்ளன. இந்நிலையில், கடந்த வாரங்களில் 15இற்கும் மேற்பட்ட பாரதூரமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த விபத்துகளுக்கு காரணம் இரவில் வெளிச்சமின்றி பயணிப்பதே. எனவே வவுனியா மாவட்டத்தில் சைக்கிள்களில் செல்வோர் டைனமோ பொருத்தியிருக்க வேண்டும். அத்துடன், சைக்கிள்களில் பரவலாக செல்வதை தவிர்ப்பதுடன், வீதி விதிகளையும் பின்பற்ற வேண்டும். இவற்றை மீறுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)






# கறுப்பு ஜூலை நினைவேந்தல் காலிமுகத்திடலில் அனுஷ்டிப்பு!

கொழும்பு, ஜூலை 26

**தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கறுப்பு ஜூலை இனக்கலவரங்களின் 39 ஆவது ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.**

1983 ஆம் ஆண்டு , ஜூலை 23 ஆம் திகதி நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதன்போது கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப் பட்டும், அழிக்கப்பட்டும், வடக்கு நோக்கி அகதிகளாகவும் விரட்டியடிக்கப் பட்டனர்.

நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப் பட்டதோடு பெரும் எண்ணிக் கையானோர் படுகாயம் அடைந்தனர்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் ஆதரவுடன் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் நிகழ்வு நேற்று முன்தினம் காலிமுகத்திடல் பகுதியில் இடம்பெற்றது.

இவ்வாறு, தமிழருக்கு எதிரான இனஅழிப்பு கட்ட விழ்த்து விடப்பட்ட கறுப்பு ஜூலையின் 39 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு, இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டன.

இந்நிலையில், 1983 ஜூலையில் கொடூரமாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப் பட்டமையை அடையாளப் படுத்தும் வகையில் கலைஞர் பிரபுத்த தனுஷ்க காலிமுகத் திடலில் ஆற்றுகையொன்றை அரங்கேற்றியிருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூர்ந்து கலைஞர் பிரபுத்த தனுஷ்க என்பவரால் மேற்கொள்ளப் பட்ட வலிமிகுந்த கலைப் படைப்பாக மனதை உருக்கும் விதத்தில் அரங்கேற்றியிருந்தார்.

இதேவேளை, 1983 ஜூலை மாதம் அரசாங்கத்தின் ஆதரவு டன் காடையர்களால் படு கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் நிகழ்வு நேற்றையதினம் கொழும்பு பொரளை மயானமருகில் இடம் பெற்றது. வடக்கு- கிழக்கு- தெற்கு- மலையகம்- புலம்பெயர் மக்கள் ஒன்றி ணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 3 வாரங்களில் மட்டும் 9,000 டெங்கு நோயாளர்!

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் டெங்கு நோய் பரவல் சடுதியாக அதிகரித்து வருகிறது. கடந்த 3 வாரங்களில் மட்டும் சுமார் 9 ஆயிரம் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமை அதிதீவிர நிலையை அடைவதற்கு முன்னர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 வாரங்களில் சுமார் 9000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நிலைமையை உடனடியாக கட்டுப்படுத்தி, டெங்கு நோய் பாரதூர நோய் நிலைமையாக பரவுவதைத் தடுக்க வேண்டும்.

இதற்காக டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை தூய்மையாக வைத்திருப்பதோடு, வீடு மற்றும் தொழில் புரியும் இடங்கள் அமைந்துள்ள சுற்றுப்புறச் சூழலையும் தூய்மையாக வைத்திருப்பது அத்தியாவசிய மானதாகும். இந்த ஆண்டில், இதுவரையான காலப்பகுதியில், அதாவது சுமார் 7 மாதங்களில் 44 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்து வருவதால் , டெங்கு நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அவற்றை உதாசீனப்படுத்தாது , உடனடியாக வைத்திய சாலைக்கு சென்று சிகிச்சை பெற வேண்டும் - என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## இலங்கையுடனான உறவை வலுவாக்க ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கிறோம்!

### ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

ரஷ்யா - இலங்கை இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்து கடிதத்திலேயே அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின்போதே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடைய வாழ்த்து கடிதத்தையும் கைய ளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவிற்கு ரஷ்ய ஜனாதிபதி அனுப்பியுள்ள கடிதத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத் துவதற்கு ரஷ்ய ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"ரஷ்ய மக்களின் நலன்களுக் காகவும், பிராந்திய ஸ்திரத் தன்மை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தும் நலனுக்காகவும் பல்வேறு துறைகளில் ஆக்கபூர் வமான இருதரப்பு ஒத்து ழைப்பை மேலும் மேம்படுத் துவதற்கு அரச தலைவர் என்ற முறையில் உங்களது செயல் பாடுகளை நான் எதிர்பார்க்கி றேன்" என்று ரஷ்ய ஜனாதி பதியின் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## கடின முடிவுகளை எடுக்காவிடின் நாடு பேரழிவுக்குள் அகப்படும்!

### ஜனாதிபதிக்கு இந்திரஜித் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கடுமையான நடவடிக்கை களை நடைமுறைப்படுத்தாவிட் டால் நாடு பொருளாதாரப் படு குழிக்குள் விழும் என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரி வித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அர சாங்கம் கடுமையான நடவடிக் கைகளை நடைமுறைப்படுத்தி னால் இலங்கை மீண்டும் முன் னைய நிலைக்கு செல்வதற்கு ஐந்து வருடங்களாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார மீட்சிக்கு வலியுடனான சிகிச்சை அவசி யம் எனத் தெரிவித்துள்ள அவர் பேரழிவு நிலையை தவிர்ப்ப தற்கு ஜனாதிபதி அனைத்து கடினமான தீர்மானங்களையும் எடுப்பார் என நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க பொருளாதார ரீதியிலான அறிவு மிக்கவர் என்ன செய்யவேண் டும் என்பது அவருக்கு தெரி யும், அரசியல் இயக்கவியல் நாட்டை தற்போதைய நிலைக்கு தள்ளியுள்ளது. மக்களை கவர் வதற்கான ஜனரஞ்சக நச்சு அர சியல், ஆகியவற்றின் காரண மாக ரணில் விக்கி ரமசிங்க வுக்கும் ஏனைய அரசி யல்வா திகளுக்கும் அவற்றை செய்ய முடியாமல் போயுள்ளது.

ஆனால், ஜனாதிபதி அதனை புரிந்துகொண்டால் அவரால் அதனை நிறைவேற்ற முடியும். ஜனாதிபதி கடின மானதை செய்ய தயாராக யுள்ளார் போல தோன்றுகின் றது. அவர் அதனை செய்யா விட்டால் இலங்கை படுகுழிக் குள் சிக்குப்படும். அது பேரழிவாக அமையும் - என் றும் கூறினார். (ஐ)

## போராட்டக்காரர்கள் ஐவருக்கு பயணத்தடை!

கொழும்பு, ஜூலை 26

கடந்த காலங்களில் இடம் பெற்ற போராட்டங்களில் முன் னின்று செயல்பட்ட ஐவருக்கு வெளிநாடு செல்லத் பயணத் தடை விதித்து கொழும்பு நீதி வான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

ஜோசப் ஸ்டாலின் (ஆசிரிய தொழிற்சங்கம்), அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், லஹிரு வீரசேகர (மாற்றத்துக்கான இளைஞர்), வசந்த முதலிகே எரங்க குண சேகர ஆகியோருக்கே இவ் வாறு நீதிமன்றம் பயணத்தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# கிளிநொச்சியில் எரிவாயு விநியோகம் இடம்பெற்றது



கிளிநொச்சி, ஜுலை 26

கிளிநொச்சி மாவட்டத்திலும் எரிபொருள் விநியோகம் அமைதியான முறையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

கரடிபோக்கு சந்தியை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள லிட்ரோ நிறுவன அலுவலகத்தில் வைத்து மக்களுக்கான எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

மக்கள் தமக்கான எரிவாயு சிலிண்டர்களை அமைதியாக நீண்ட வரிசையில் நின்று பெற்று சென்றமையை அவதானிக்க முடிந்தது. (ஐ)

# பரவும் கொரோனா ஆபத்தானது முகக்கவசம் அணிவது கட்டாயம்!

கொழும்பு, ஜுலை 26

**தற்போது பரவி வரும் புதிய வகையான வைரஸை கண்டுபிடிப்பதற்கு மிகவும் சிரமம் என்பதாலும், உயிருக்கு ஆபத்து என்பதாலும் மக்கள் அவசியம் முகக் கவசங்களை அணிய வேண்டும் என மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

இது டெல்டா வைரஸை விட ஐந்து மடங்கு சக்தி வாய்ந்ததாகும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மூட்டு வலி, தலைவலி, கழுத்து வலி, முதுகின் மேல் பகுதியில் வலி, நிமோனியா என்பன இதன் அறிகுறிகளாகும். குறுகிய காலத்துக்குள் இந்த நோயின் தாக்கம் தீவிரமடையும் என அந்த மருத்துவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயத்தில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும், மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள இடங்களை தவிர்க்குமாறும், முகக் கவசங்களை அணிந்து அடிக்கடி கைகளை கழுவிக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ரயில் நிலைய அதிபர்கள் போராட்டம் திணைக்களத்துக்கு ரூ. 1 கோடி நட்டம்!

கொழும்பு, ஜுலை 26

ரயில் நிலைய அதிபர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக ரணில் திணைக்களத்துக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 6 மணி முதல் நேற்று பிற்பகல் வரை, தொடருந்து பயணச்சீட்டு வழங்கும் செயல்பாட்டிலிருந்து விலகியிருந்த போதிலும், ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

எவ்வாறாயினும், பணிப் புறக்கணிப்பால் தொடருந்து திணைக்களத்திற்கு நட்டம் ஏற்பட்டால் அதற்கு தமது தொழிற்சங்கம் பொறுப்பேற்காது என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# ஓகஸ்ட் 9ஆம் திகதி ரணில் விரட்டப்படுவார்!

## அநுரகுமார திஸநாயக்க எம். பி.



கொழும்பு, ஜுலை 26

"ராஜபக்ஷக்கள் மக்களால் எப்படி விரட்டப்பட்டார்களோ அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி விரட்டியடிக்கப்படுவார்."- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க எம். பி. தெரிவித்தார்.

காலிமுகத்திடல் மக்கள் போராட்டம் ஜுலை 14ஆம் திகதி வெற்றியுடன் முடிந்துவிட்டது என்றும், அதன் பின்னர் அங்கு கிளர்ச்சிக்கான ஆயத்தங்களே நடைபெற்றன. அதனையே படையினர் அடக்கியுள்ளனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கருத்துத் தெரிவித்த அநுரகுமார, "கொழும்பு - காலிமுகத் திடலில் அன்றும் போராடியவர்கள் மக்கள்தான். இன்றும் போராடுபவர்கள் அதே மக்கள்தான். இந்நிலையில், அமைதி வழியில் போராடும் மக்களைக் கிளர்ச்சியாளர்கள் என்று பொய் கூறி அவர்கள் மீது ஆயுதப் படைகளைக் கொண்டு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாக்குதல் நடத்த உத்தரவிட்டமை மாபெரும் அராஜகம் ஆகும். இது போராடும் மக்களுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

"ரணில் வீட்டுக்குப் போ" என்பதே மக்களின் தற்போதைய கோரிக்கை. இதற்கு மதிப்பளித்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியிலிருந்து உடனடியாக விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் ராஜபக்சக்கள் போல் அடுத்த மாதம் (ஓகஸ்ட்) 9 ஆம் திகதி மக்களால் அவர் வீட்டுக்கு விரட்டியடிக்கப்படுவார்" - என்றார்.

மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகியிருந்தார். ஜூன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ விலகியிருந்தார். ஜுலை 9ஆம் திகதி கொழும்பில் மக்கள் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தப்பியோடி கடந்த 14ஆம் திகதி பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா நகர சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்!

வவுனியா,ஜுலை 26

வவுனியா நகர சபையின் புதிய உறுப்பினராக நடராசா கருணாநிதி நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

வைரவபுளியங்குளம் வட்டாரத்தில் போட்டியிட்டு நகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட நா. சேனாதிராசா அண்மையில் தனது பதவியை இராஜிநாமா செய்தார். இதையடுத்து அவரின் இடத்திற்கு ந. கருணாநிதியின் பெயர் கட்சியின் பொதுச்செயலாளரால் தேர்தல்கள் திணைக்களத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

கட்சித்தலைமையின் வேண்டு கோளுக்கு அமைய வட்டாரங் களில் பொதுப்பட்டியலில் போட்டியிட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் ஏற்கனவே வவுனியா நகர வட்டாரத்தின் உறுப்பினர் ரி. கே. ராஜலிங்கம் தனது பதவியை இராஜிநாமா செய்தார். அவரின் இடத்துக்கு பொதுப்பட்டியல் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பூந்தோட்டத்தில் வதியும் நடராசா கருணாநிதி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஆவார். 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் குடியிருப்பு வட்டாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பொதுப் பட்டியலில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிளிநொச்சியில் வீதியோரமாக பிறந்து 3 நாளேயான சிசு மீட்பு!

கிளிநொச்சி, ஜுலை 26

பிறந்து 3 நாட்களேயான சிசுவொன்று வீதியோரத்தில் கைவிடப்பட்ட நிலையில் உயிருடன் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி - அக்கராயன் குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கு அமைய துணியால் சுற்றப்பட்ட நிலையில் பொலிஸாரால் அந்த சிசு மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சிசு கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை அக்கராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# எரிபொருள் வரிசையில் முறுகல் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை!

கொழும்பு, ஜுலை 26

எரிபொருள் வரிசையில் நின்றிருந்த நபர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார். மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோல் திருடுவது தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் சந்தேக நபர் மோட்டார் சைக்கிள் உரிமையாளரை குத்திக் கொன்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை கொழும்பு - பொரளை காசில் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அதே இடத்தை சேர்ந்த 40 வயது நபரே கொலையானார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 29 வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாராளுமன்ற குழு கூட்டத்தைப் புறக்கணிக்கிறார் வாசுதேவ!

கொழும்பு, ஜுலை 26

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள் ளுமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கையை நிராகரித்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், குழு கூட்டத்தில் பங்கேற்குமாறு கோரி நேற்று தனக்கு தொலைபேசி அழைப்பு வந்ததாக கூறினார். இன்று 26ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நிதியமைச்சின் புதிய கட்டிட கேட்போர் கூடத்தில் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக் கப்பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் பங்கேற்குமாறு ஒரு பெண்மணியிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. குழுக் கூட்டம் பற்றி தாம் விசாரித்தபோது, அது ஆளும் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட குழுக் கூட்டம் என்று அழைத்தவர் கூறினார் என்றும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது என்று அவர் தெரிவித்தார்.


எனினும், தாங்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருப்பதால் அந்தக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று நாணயக்கார குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் உள்ள 158 உறுப்பினர்க ளுக்கு அந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள் ளனர். இதன்போது அரசாங்கம் தங்களுக்கு ஆதரவாக வாக்களித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சமாதானப்படுத்த முயற்சிக்கப் படும் என்று தாம் நம்புவதாக வாசுதேவ குறிப்பிட்டார். (ஐ)

# இலங்கை மக்கள் நிராகரித்த ரணில் நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்ற முரண்:

## அரசியலமைப்பில் தீர்வு உண்டா?

யூ.எல்.மப்ரூக்



"போலிப் பெரும்பான்மை" மூலம் ரணில் விக்ரமசிங்க - ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கூறியிருக்கிறார். "மக்களின் விருப்பத்தினை ரணிலுக்குக் கிடைத்த நாடாளுமன்றப் பெரும்பான்மை பிரதிபதிக்கவில்லை" என்பது சுமந்திரனின் கருத்தாக உள்ளது.

அரசியலமைப்பிலுள்ள "ஓட்டை" வழியாகவே, ரணில் இந்தப் "போலி"ப் பெரும்பான்மையைப் பெற்று, ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார் என பலரும் விமர்சிக்கின்றனர்.

69 லட்சம் வாக்குகளைப் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ, மக்களின் போராட்டத்துக்குப் பயந்து - ஜனாதிபதிப் பதவியை ராஜினாமா செய்த நிலையில், மக்களால் புறக்கணிக்கப்பட்டு பொதுத் தேர்தலில் தோற்றுப் போய் - தேசியப் பட்டியல் வழியாக நாடாளுமுன்றம் வந்த ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதி ஆகியுள்ளமை - திகைப்பூட்டும் ஆச்சரியமாகும்.

இலங்கை அரசாங்கத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகள் உச்சமானவையாக உள்ளன. இந்த இரண்டு பதவிகளும் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைத்திருக்கின்றன. இதில் விசித்திரமான விடயம் என்னவென்றால், எதிர்பாராத வகையில் ஜனாதிபதி பதவிகள் வெற்றிடமான சந்தர்ப்பங்களில்தான், மேற்படி இரண்டு பதவிகளும் ரணில் விக்ரமசிங்கவுக்கு முதன்முதலில் கிடைத்திருக்கின்றன.

1993ஆம் ஆண்டு மே 01ஆம் திகதி, அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ - குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதையடுத்து, பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க - ஜனாதிபதியானார். இதனால் காலியான பிரதமர் பதவிக்கு ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டார். அது அவர் பிரதமரான முதலாவது சந்தர்ப்பமாகும்.

இப்போது, ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் பதவியை ராஜினாமா செய்தமையினை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது அவர் ஜனாதிபதியான முதல் தடவையாகும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி - அரசியல் நெருக்கடியாக மாறியதையடுத்து, கடந்த மே 09ஆம் திகதியன்று பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகினார். அதனையடுத்து பிரதமர் பதவிக்கு ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ - ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்தமையினை அடுத்து, அந்த இடத்துக்கு ரணில் விக்ரமசிங்க தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 40(1) பின்வருமாறு கூறுகிறது. "ஜனாதிபதியின் பதவி - அவரின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் காலியானால் ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராயுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நாடாளுமன்றம் தேர்ந்தெடுத்தல் வேண்டும்".

இதற்கு அமையவே ஜனாதிபதி பதவிக்கு முன்மொழியப்பட்ட மூன்று நபர்களில் ஒருவரைத் தெரிவு செய்யும் பொருட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நடத்தப்பட்ட ரகசிய வாக்கெடுப்பில் 134 எனும் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார் என்பதெல்லாம் நாம் அறிந்த விடயங்களாகும்.

இந்த நிலையில், ரணில் விக்ரமசிங்க - போலிப் பெரும்பான்மையின் ஊடாக ஜனாதிபதியானார் என்கிற குற்றச்சாட்டுக்களும், மக்களின் விருப்பத்தினை ரணிலுக்குக் கிடைத்த நாடாளுமன்றப் பெரும்பான்மை பிரதிபதிக்கவில்லை என்கிற விமர்சனங்களும் சரியா? தவறா என்கிற கேள்விகள் விவாதங்கள் உருவாகியுள்ளன.

இதுகுறித்து அரசியலமைப்பில் நிபுணத்துவம் வாய்ந்த இருவரிடம் பேசியபோது:

"ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுடைய விருப்பு - வெறுப்புகள்தான் அவர்களின் பிரதிநிதிகள் ஊடாக வெளிப்பட வேண்டும்" என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சர்வதேச சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.எம். ஹக்கீம். "மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் போது, இரு தரப்புக்கும் இடையில் உட்கிடையான ஓர் ஒப்பந்தம் ஏற்படுகிறது" என்றும், "அது - "சமூக ஒப்பந்தம்" என அழைக்கப்படுகிறது" எனவும் அவர் தெரிவிக்கிறார்.

"மக்களின் அடிப்படைச் சுதந்திரம், உரிமைகள், பாதுகாப்பு, மேம்பாடு, முன்னேற்றம், நலன்புரி அம்சங்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் அனைத்தும் பாதுகாத்து மேம்படுத்தப்படும் என அந்த ஒப்பந்தம் அமையும். இதனடிப்படையிலேயே மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றனர். இது "மக்கள் ஆணை" அல்லது "ஜனநாயகத்தின் அடிப்படை" எனக் கூறப்படுகிறது.

மக்களின் விருப்பு - வெறுப்புகளின் அடிப்படையில்தான் ஆட்சி அமைய வேண்டுமென ஜனநாயகத்தின் அடிப்படை கூறுகின்றது.

சிலவேளை ஆட்சியாளர்களின் நடவடிக்கை காரணமாக, மக்களின் அடிப்படைச் சுதந்திரம், உரிமைகள், பாதுகாப்பு, மேம்பாடு, முன்னேற்றம், நலன்புரி அம்சங்கள் மற்றும் வாழ்வாதாரம் போன்றவற்றில் பிரச்சினைகள் ஏற்படுமாயின், மக்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் முறிவடையும். அப்போது "ஆட்சியாளர்கள் - மக்களின் பிரதிநிதிகள் இல்லை" எனும் நிலை ஏற்படும் என்பது கோட்பாடாகும்.



தேர்தல்களின் போது மக்கள் தமது இறைமையை தமது பிரதிநிதிகளுக்கு வழங்குகின்றனர். இலங்கை ஒரு குடியரசு என்பதனால் - இங்கு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சியே நடைபெறுகிறது.

மக்களுக்கும் - மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தமானது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி ஆகியோருடன் 5 வருடங்களைக் கொண்டதாக இருக்கும் என அரசியலமைப்பு கூறுகின்றது.

அரசியலமைப்பின் கறுப்பு எழுத்துக்கள் மாத்திரம் - மக்களின் இறைமையினைத் தீர்மானிக்க முடியாது. யதார்த்தத்திலும் நடைமுறையிலும் உள்ள விடயங்களே அதனைத் தீர்மானிக்கும் என்கிற ஓர் அரசியல் கோட்பாடு உண்டு என்கிறார் அவர்.

எனவே அரசியலமைப்பை பொருள்கோடல் செய்ய வேண்டிய கடமை நீதித்துறையைச் சென்றடைகிறது. அரசியலமைப்பை நீதித்துறை பொருள்கோடல் செய்யும் போது, மக்களின் இறைமையை பாதுகாக்கும் அடிப்படையில் நடந்து கொள்தல் வேண்டும். அவ்வாறு பொருள்கோடல் செய்யாமல் அரசியலமைப்பின் எழுத்துக்களுக்கு பொருள் கொண்டால், அரசியலமைப்பியம் தோற்றுவிடும். ஆனாலும் அரசியலமைப்பு பாதுகாக்கப்படும்," என சிரேஷ்ட விரிவுரையாளர் ஹக்கீம் கூறுகின்றார்.

"இலங்கையைப் பொறுத்த வரையில் இப்போது நடைமுறையில் மக்களின் எதிர்பார்ப்புகள் தோல்வியடைந்துள்ளன, தேவைகள் நிறைவேற்றப்படவில்லை, மக்களின் பிரதிநிதிகளாக ஆட்சியாளர்கள் செயற்படவில்லை. இந்த நிலைவரத்தை அரசியலமைப்பின் கறுப்பு எழுத்துக்களின் படி பார்த்தால், அனைத்தும் சரியாக நடப்பதாகவே தோன்றும். ஆனால் யதார்த்தத்தைப் பிரதிபலிக்காத அரசியலமைப்பு தோல்வி கண்டதாகிவிடும்" என அவர் குறிப்பிட்டார்.

"மக்களின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் அரசியலமைப்புக்கு பொருள் கொள்ளப்பட்டால், நாடாளுமன்றம் தற்போது மக்களுடைய யதார்த்தமான அபிலாசைகளைப் பிரதிபலிக்கவில்லை என்று சொல்ல முடியும்".

"இது இலங்கையினுடைய ஜனநாயக கட்டமைப்பு, ஜனநாயக மரபு, ஜனநாயக பாரம்பரியம் போன்றவற்றின் தோல்வியே தவிர - அரசியலமைப்பின் தோல்வியல்ல" எனவும் ஹக்கீம் விவரித்தார்.

### உச்ச நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தலாம்

"பொதுத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தோல்வியடைந்த ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றின் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில், எந்தவொரு இலங்கைப் பிரஜையும் உச்ச நீதிமன்றில் தன்னுடைய அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்க செய்ய முடியும்" என்கிறார் சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி ஹக்கீம்.

"அதாவது "நாட்டின் அதியுட்ச சட்டமான அரசியலமைப்பு, எனது அடிப்படை உரிமையை, மக்கள் ஆணையை, இறைமையை பாதுகாக்கவில்லை" எனக் கூறி, அரசியலமைப்பின் 12(1)இன் கீழ் சாட்டுதல் செய்து மனுவொன்றைத் தாக்கல் செய்யலாம். அப்போது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கத்தின் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றம் பொருள்கொள்ள வேண்டுமே தவிர, எழுத்துக்களின் அடிப்படையில் பொருள்கொள்ள முடியாது. அப்படி உரிய முறையில் பொருள் கொண்டால், "இது ஜனநாயகத்தையும், மக்களின் உண்மையான அபிலாசைகளையும் பிரதிபலிக்கவில்லை" என நீதிமன்றம் கூறும். ஆனால் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறோ அல்லது நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவை ரத்துச் செய்யுமாறோ உச்ச நீதிமன்றம் உத்தரவிட முடியாது".

"ஏனென்றால் சட்டவாக்க சபையான நாடாளுமன்றம், நிறைவேற்றுத் துறையான ஜனாதிபதி மற்றும் நீதித்துறை ஆகியவை தனித்துவமான துறைகளாக செயற்பட முடியுமே தவிர, ஒரு துறை - இன்னொரு துறையில் தலையீடு செய்ய முடி யாது. உதாரணமாக நாடாளுமன்றம் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என, நீதித்துறை கூற முடியாது," என்றும் அவர் தெரிவித்தார்.

### அரசியலமைப்பும் திருத்தங்களும்

"நமது அரசியலமைப்பு 20 தடவை திருத்தப்பட்டுள்ளது. அநேகமாக ஆட்சிக்கு வந்தவர்கள் தமது விருப்பு - வெறுப்புகளின் அடிப்படையிலும், ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவுமே அரசியலமைப்பைத் திருத்தினார்கள். அரசியலமைப்பின் ஊடாக மக்களின் உரிமை, சுதந்திரம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ஒற்றுமை, பன்மைத்துவத்தைப் பாதுகாத்தல், இனப் பிரச்சினை மற்றும் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக அரசியலமைப்பு திருத்தப்படவில்லை.

13ஆவது திருத்தம் (மாகாண சபை முறைமை) மட்டும் இதற்கு விதிவிலக்காக அமைந்துள்ளது.

மேலும் 17 மற்றும் 19ஆவது திருத்தங்கள் அதிகாரங்களைக் குறைப்பனவாக அமைந்துள்ளன.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கை மக்கள் நிராகரித்த ரணில்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதிக்கான அதிகாரங்களை நாடாளுமன்றுக்கு வழங்குவனவாக அமைந்திருந்தன.

எனவே மக்களுக்குத் தேவையானதாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாகவும் அரசியல் அமைப்பைத் திருத்த வேண்டும். அது எவ்வாறெனில், இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இன்று வரையுள்ள தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கூடிதாக அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும். குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு பன்மைத்துவ அடிப்படையில் தீர்வு வழங்கக் கூடிய வகையில் அரசியலமைப்பு அமைதல் வேண்டும். மேலும் கட்சிமுறை அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்காத அரசியலமைப்பாக அது இருக்க வேண்டும். பொருளாதார ரீதியான தீர்மானங்களுக்கு பதில் சொல்லும் வகையிலான அரசியலமைப்பாகவும் இருக்க வேண்டும். அதாவது அரசியல் ரீதியாக பொருளாதார நடைமுறைகளைத் தீர்மானமாக எடுக்கும் (Political economy) நிலையிலிருந்து அரசியலமைப்பு சார் பொருளாதாரம் (Constitutional economy) எனும் கருத்து நிலைக்கு மாற்றமடைதல் வேண்டும். அதாவது பொருளாதார ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்காக வழிமுறைகளையும் வழிகாட்டிக் கோட்பாடுகளையும் அரசியலமைப்பு குறிப்பிடுதல் வேண்டும்".

"இந்த ஏற்பாடுகள் இலங்கையின் அரசியலமைப்பில் இருக்கிறதா? இல்லையா எனக் கேட்டால், இருக்கிறது".

"அரசியலமைப்பின் 6ஆவது அத்தியாயத்தில் "அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்" எனும் தலைப்பில் உள்ளது. கொள்கைகளை வகுக்கின்ற போதும் சட்டங்களை ஆக்குகின்ற போதும் - நாடாளுமன்றமும் அமைச்சரவையும் 06வது அத்தியாயத்தைப் பின்பற்ற வேண்டும் என கூறுகிறது. ஆனால், அந்த அத்தியாயம் பின்பற்றப்படுவதில்லை. ஆனாலும் அதனைப் பின்பற்றாமல் விட்டால், அதற்காக நீதிமன்றத்தில் அதனைக் கேள்விக்குட்படுத்த முடியாது என்றும் அந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், அரசியலமைப்பின் அந்த ஏற்பாடுகள் அர்த்தமற்றவையாக மாறிவிட்டன".



"அரசியலமைப்பின் 06ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பின்பற்றாமல் விடும் போது, அதனை நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தும்படியாக மாற்றினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டிவிடும். அரசியலமைப்பின் 06 ஆவது அத்தியாயத்தில் இலங்கையில் தற்போதுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் கிட்டத்தட்ட தீர்வுகள் உள்ளன" என அவர் விளக்கமளித்தார்.



"இலங்கை வரலாற்றில் தற்போதைய போராட்டக்களம் என்பது ஒரு சாதனையாகும்" எனக்கூறுகின்ற ஹக்கீம் "இந்தப் போராட்டம் - மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது" என்கிறார்.

"அது அர்த்தமுள்ளதாக மாற வேண்டுமென்றால், மக்கள் - அரசியல் ரீதியான விழிப்புணர்ச்சியைப் பெறுதல் வேண்டும். தங்களுடைய அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான அடிப்படைகளை மக்கள் விளங்கிக் கொள்தல் வேண்டும்" என சிரேஷ்ட விரிவுரையாளர் ஹக்கீம் வலியுறுத்தினார்.

### அரசியலில் மக்கள் முதிர்ச்சியடையவில்லை - பேராசிரியர் சர்வேஸ்வரன்

"போலிப் பெரும்பான்மை மூலமாக - ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானார்" எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கொழும்பு பல்கலைக் கழக சட்டப் பேராசிரியர் ஆர். சர்வேஸ்வரனிடம் பேசியபோது, "ரணில் விக்ரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்டவர் எனும் வாதம் ஒன்று இருந்தாலும், அதற்கு மறுவாதமாக் "கொழும்பு மாவட்டத்திலுள்ள மக்கள் அவருக்கு வாக்களிக்காமல் விட்டிருந்தாலும் கூட, இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் அவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்" என, ரணில் தரப்பு கூற முடியும்" என்றார்.

"ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வெற்றிபெறுவார் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனாலும் இந்தளவுக்கு பெருவெற்றியாக அமையும் என எதிர்பார்க்கப்படவில்லை".

"நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பாலான அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அவர்களின் பிடியை கட்சிகளுக்குள் இழந்து விட்டனர். ஜே.வி.பியை தவிர ஏனைய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தத்தமது கட்சித் தலைமையின் தீர்மானத்துக்கு மாறாக வாக்களித்தமையினைக் காணக்கூடியதாக இருந்தது. அதனால்தான் ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகளைப் பெற்றார்" என, பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

"ரணிலுடன் போட்டியிட்ட டளஸ் அழகப்பெருமவைப் பொறுத்தவரையில் அவர் ரணிலைப் போல் படித்த, செல்வாக்குப் பெற்ற நபரில்லை. மேலும், தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பெரிதாக அறியப்பட்டவராகவும் இல்லை. ரணில் விக்ரமசிங்கவின் அபார வெற்றிக்கு அதுவும் காரணமாகும்".

"ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் போது, அந்தப் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார் எனவும், அவர் முந்தைய ஜனாதிபதியின் மீதமுள்ள பதவிக் காலத்துக்கு ஜனாதிபதியாக இருப்பார் எனவும் அரசியலமைப்பு கூறுகிறது.

அரசியலமைப்பில் கூறப்பட்டதற்கிணங்கவே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் அரசியலமைப்பை துஷ்பிரயோகம் செய்து இந்தப் பதவியை அவர் அடையவில்லை" என, பேராசிரியர் சர்வேஸ்வரன் குறிப்பிட்டார்.

"69 லட்சம் மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்த கோட்டாபய ராஜபக்ஷவை, மூன்று வருடங்கள் நிறைவடைவதற்குள் மக்கள் விரட்டியடித்து விட்டார்கள். அதேவேளை மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசியலில் முதிர்ச்சி பெற்றவர்களாக இல்லை. அவர்கள் பெரும்பாலும் மனவெழுச்சியின் அடிப்படையில் செயற்படுகின்றவர்கள். அதாவது அப்போதுள்ள உணர்வுகளின் அடிப்படையில் தேர்லில் வாக்களிக்கின்றவர்களாகத்தான் இருந்து வருகின்றார்கள். மக்களின் மன எழுச்சியின் அடிப்படையில்தான் கோட்டாபய ராஜபக்ஷவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த வகையில் மக்களின் விருப்பு - வெறுப்பு என்பது கொள்கை சார்ந்ததாகவோ, நிலையானதாகவோ இருப்பதில்லை" என, அவர் விவரித்தார்.

### திருத்துவதுதான் ஒரே வழி

இதேவேளை ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட முறைமை இனி இலங்கையில் இனி இருக்கக் கூடாது என்றால், அதற்குள்ள ஒரே வழி - அரசியலமைப்பைத் திருத்துவதுதான் என, கூறிய பேராசிரியர் சர்வேஸ்வரன் "ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் போது, ஜனாதிபதி தேர்தலொன்றினை நடத்த வேண்டுமென அரசியலமைப்பு திருத்தப்படுதல் வேண்டும்" என்கிறார்.

"அப்படி திருத்தப்பட்டாலும், இன்றுள்ள சூழ்நிலையை வைத்துப் பார்க்கும் போது, ஜனாதிபதித்



தேர்தலொன்றினை நடத்துவதற்கான பொருளாதார நிலை இலங்கையில் இல்லை" என்கிறார்.

"அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானங்களை எடுக்கின்ற போது, தமது கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் விருப்புகளை அறிந்து அவற்றுக்கு அமைய முடிவுகளை எடுப்பதாகவும் கூற முடியாது.

கட்சிகளின் தீர்மானங்களுக்கு மாறாக, அந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்வதைப் போல, கட்சிகளின் தலைமைகளும் தமது கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாகவும் முடிவுகளை எடுப்பதுண்டு.

மக்களின் பெரும் ஆதரவுடன் ஆட்சிக்கு வருபவரும், மக்களால் நிராகரிக்கப்பட்டவரும் ஒரு குறுகிய காலத்துக்குள் - அந்த நிலையிலிருந்து மாறலாம். மக்களால் ஆதரிக்கப்பட்டவர் மக்களாலேயே வெறுக்கப்படலாம். மக்கள் வெறுத்தவரை - பின்னர் மக்களே ஆதரிக்கலாம்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

### சஜித் பிரேமதாசவின் பலவீனம்

நாடாளுமன்றம் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் சஜித் பிரேமதாச போட்டியிட்டிருக்க வேண்டும் எனக்கூறும் பேராசிரியர் சர்வேஸ்வரன், வி யூகங்களை வகுப்பது அரசியலின் ஒரு பகுதி எனவும், சஜித் பிரேமதாச தனது கட்சியின் ஆதரவுடனும், தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் ஆரவுடனும், பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது பக்கத்துக்கு இழுத்து, அவர்களின் ஆதரவைப் பெற்றும், அவர் வெற்றிபெற முயற்சித்திருக்க வேண்டும் என்கிறார்.

"அவ்வாறு செய்யாமல் அவர் பின்வாங்கியமை மட்டுமல்லாமல், ராஜபக்ஷ குடும்பத்தினரின் பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்ரான டலஸ் அழகபெருமவை தேர்தலில் நிறுத்தி - ஆத ரித்தமை, சஜித் பிரேமதாசவின் அரசியல் பலவீனத்தினையே காட்டுகிறது" எனக் குறிப்பிட்ட தோடு, "பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி தேர்வின் போது சஜித் ஆதரித்திருக்கவே கூடாது" என்றும் கூறினார்.



மேலும், "மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மற்றும் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்பவை கூட இலங்கையில் ஒரு மாயையாகவே இருக்கின்றது" எனவும் சர்வேஸ்வரன் தெரிவித்தார். **(பிபிசி)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**06)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ..........................................................................

ii) ........................................................ குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : .................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ...................................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread: ............................ ii) Cloud: ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ....................................

ii)  ....................................

(2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ..........................................................................

ii) old / How / you? /are : .......................................................................... (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ...............................................................

ii) தொளஹ : ........................................................... (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)**

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.................................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

---

கல்வி tv CHANNEL-1

**26.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**26.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கோட்டாபய ராஜபக்ஷவை நீதியின் முன் நிறுத்துங்கள்!

## அருட்தந்தை ஜெகதாஸ் கோரிக்கை

**மட்டக்களப்பு, ஜூலை 26**

**இந்த நூற்றாண்டில் பெரும் இன அழிப்பை மேற்கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் செயல்பாட்டாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் எஸ். சிவயோகநாதன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தின் செயல்பாட்டாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

வட, கிழக்கில் தமிழ் தேசியத்தின் பெயரால் செயற்படும் அனைத்து கட்சிகளும் மக்களின் நலனுக்காக செயற்படவேண்டிய நிலையில் தங்களது சொந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இயங்குவதாக அவர் தெரிவித்தனர்.

இதேநேரம் காலம்காலமாக தமிழ் தேசியத்தைப் பேசி அரசியல் செய்பவர்கள் தொடர்ச்சியான தவறுகளை செய்து வருகின்றனர். தமிழ் மக்களின் நிலையை கருத்தில்கொண்டு இனியாவது ஒன்றிணைந்து செயல்படவேண்டும் - என்று சிவயோகநாதன் தெரிவித்தார். (ஐ)



# மட்டக்களப்பிலும் நேற்று பாடசாலைகள் ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஜூலை 26

நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்திலும் சகல பாடசாலைகளும் நேற்று மீளத்திறக்கப்பட்டன.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது. சில பாடசாலைகளில் மாணவர்களின் வரவு அதிகளவில் காணப்பட்டதாக கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அவசர கால நிலையின் கீழ் ஆசிரியர்களுக்கு எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்க வேண்டும் இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)

# வீடுடைத்து திருட்டு; எண்மர் கைதாகினர்!

திருகோணமலை, ஜூலை 26

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஒன்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டு உபகரணங்களை திருடிய எட்டுப் பேரை நேற்றுக் கைது செய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மற்றும் பாலையூற்றை சேர்ந்த 25 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட எட்டுப் பேரரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை பகுதியுள்ள வீடொன்றை உடைத்து மின்விசிறி,தையல் இயந்திரம், ஒலி பெருக்கி சாதனங்கள், இசைக்கருவி மற்றும் மின்னழுத்தி போன்ற உபகரணங்களை திருடி விற்பனை செய்துள்ளனர் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# நகையை அபகரிக்க சிறுமியின் கழுத்தை நெரித்தவர் சிக்கினார்!

வாழைச்சேனை, ஜூலை 26

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை - நெசவு வீதியிலுள்ள வீடு ஒன்றின் சமயலறை யன்னல் வழியாக உள் நுழைந்த திருடன், நித்திரையிலிந்த 15 வயதுச் சிறுமியின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட போது சிறுமி கத்தியதால், திருடன் தப்பியோடியுள்ளார்.

அதிகாலை 3 மணியளவில் வந்துள்ள திருடன், அலுமாரியை உடைத்து அதிலிருந்த 25 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்த பின்னரே உறங்கிக் கொண்டிருந்த சிறுமியின் கழுத்தை நெரித்து தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார்.

சிறுமியின் சத்தமிட்டதால் வீட்டில் இருந்தவர்கள் எழும்பிய நிலையில், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

எனினும், சிறுமி கூறிய அடையாளங்களுக்கு அமைய திருட்டு சந்தேகநபரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்தனர். கைதானவர் ஏற்கனவே பல தடவைகள் திருட்டுக் குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு மக்களுக்கு எரிவாயு விநியோகம்!



மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்த மக்களுக்கு நேற்று ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலக ஊழியர்களின் ஒழுங்குபடுத்தலில் குடும்ப அட்டையின் அடிப்படையில் இந்த விநியோகம் இடம்பெற்றது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக எரிவாயுவை பெறமுடியாத நிலையில், நேற்று எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

இதேசமயம், மட்டக்களப்பு மாநகரின் பயனியர் வீதியிலும் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன. (ஐ)

# இரு மாதங்களுக்கு பின்னர் திமிலைதீவுக்கு எரிபொருள்

மட்டக்களப்பு, ஜூலை 26

மட்டக்களப்பு மண்முனை - திமிலைதீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று எரிபொருட்கள் மிகவும் நேர்த்தியான முறையில் வழங்கப்பட்டன.

கூட்டுறவுச்சங்கத்தின் முகாமைத்துவத்தின் கண்காணிப்பில் மண்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வழிநடத்தலின் கீழ் எரிபொருட்கள் வழங்கப்பட்டன.

மோட்டார் சைக்கிள்கள்,முச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்களுக்கு இன்றைய தினம் எரிபொருட்கள் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் குடும்ப அட்டைகள் பதியப்பட்டுள்ள வழங்கப்பட்டன. இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு மாதங்களுக்கு பின்னர் எரிபொருள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நகைகள் திருட்டு; ஐந்து பேர் கைது!

மட்டக்களப்பு, ஜூலை 26

ஏறாவூர் பிரதேசத்தில் வீட்டை உடைத்து அங்கிருந்து எட்டே கால் பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள் 3 ஆண்கள் உட்பட 5 பேரை நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடம் இருந்து மூன்றரை பவுண் தங்கச் சங்கிலி மட்டும் மீட்கப்பட்டுள்ளது. (ஐ)

# முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு எரிபொருள்!

அட்டாளைச்சேனை, ஜூலை 26

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிறுபோக வேளாண்மை அறுவடை மேற்கொள்வதற்கு ஏதுவாக அறுவடை இயந்திரங்களுக்கும், அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொண்டு செல்வதற்கான உழவு இயந்திரங்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட சுமார் 7 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் உள்ளதாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எல். அஸ்ரப் தெரிவித்தார்.

எனவே, அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே. எம்.ஏ. டக்ளஸின் அறிவுறுத்தலுக்கமைய, பிராந்திய விவசாயிகளுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டை மூலம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு இல்லாமல் நெல் அறுவடை சீராக நடைபெற வேண்டுமென்பதற்காக சகல விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 லீற்றர் டீசல் கிரமமான முறையில் வழங்குவதற்கு எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு கமநல சேவை மத்திய நிலையத்தினூடாக வழங்கப்பட்டுள்ள எரிபொருள் பங்கீட்டு அட்டையுடன் உரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்ற போதிலும் வேளாண்மை அறுவடை செய்வதற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு






## இந்தியாவின் ஜனாதிபதியாக திரௌபதி முர்மு பதவியேற்பு

புதுடில்லி, ஜூலை 26

இந்தியாவின் 15ஆவது ஜனாதிபதியாக திரௌபதி முர்மு நேற்று திங்கட்கிழமை முற்பகல் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்திய பாராளுமன்றத்தில் இந்திய உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசர் என். வி. ரமணா முன்னிலையில் அவர் பதவியேற்றார்.

இந்திய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக கடந்த 18 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. ஜனாதிபதி பதவிக்கு ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கூட்டணி சார்பில் திரௌபதி முர்முவும், எதிர்க்கட்சிகள் சார்பில் யஷ்வந்த் சின்ஹாவும் போட்டியிட்டிருந்தனர்.

இந்தநிலையில், கடந்த 21ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகியிருந்த நிலையில், பாரதிய ஜனதா கூட்டணி சார்பில் போட்டியிட்ட திரௌபதி முர்மு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்தின் பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து, புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற திரௌபதி முர்மு, இந்தியாவின் முதல் பழங்குடியின மற்றும் இரண்டாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இவரின் பதவியேற்பு நிகழ்வில் இந்திய பிரதமர் நரேந்திமோடி, குடியரசு துணைத் தலைவர் எம். வெங்கையா நாயுடு, மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், முப்படை தளபதிகள், காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி, மாநில ஆளுநர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



## ஜப்பானில் எரிமலை சீற்றம் 5ஆம் நிலை எச்சரிக்கை அமுல்!

ரோக்கியோ, ஜூலை 26

தெற்கு ஜப்பான் - ககோஷிமாவில் உள்ள சகுராஜிமா எரிமலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வெடித்து எரிமலைக் குழம்புகளை வெளியிட ஆரம்பித்தது. பெருமளவு சாம்பலும் எரிமலையில் இருந்து வெளியேறி வருகிறது.

இதனையடுத்து சகுராஜிமா மலைப் பகுதியைச் சூழவுள்ள மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு உள்ளூர் நேரப்படி 8 மணிக்கு எரிமலை வெடிக்க ஆரம்பித்து பல மீற்றர் உயரத்துக்கு பெரிய சுவாலைகளை வெளியானதாக ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிமலை வெடிப்பை அடுத்து அபாய எச்சரிக்கை ஐந்தாம் நிலைக்கு உயர்த்தப்பட்டது. இதன்மூலம் மலைப்பகுதிக்கு ஆட்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் மூன்றாம் நிலை எச்சரிக்கை அமுலில் இருந்தது.

ஜப்பானில் ஏராளமான இயங்கும் எரிமலைகள் உள்ளன. ஜப்பான் பசுபிக் எரிமலை வளையம் (Pacific Ring of Fire) என்று அழைக்கப்படும் இடத்தில் அமைந்துள்ளது. இதனால் இந்த நாடு அடிக்கடி நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்புகளால் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாப்பரசர் பிரான்சிஸ் கனடா பயணம் பழங்குடியினரிடம் மன்னிப்பு கேட்பார்!

ஒட்டாவா, ஜூலை 26

உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த போப் பாண்டவர் பிரான்சிஸ் 6 நாட்கள் பயணமாக ஞாயிற்றுக்கிழமை இரவு கனடா சென்றடைந்தார்.

கனடா வந்திறங்கிய அவரை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆளுநர் நாயகம் மேரி சைமன், பழங்குடி மக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இந்தப் பயணத்தின் போது குடியிருப்புப் பள்ளிகளில் பழங்குடியின குழந்தைகள் அனுபவித்த துஷ்பிரயோகங்களுக்காக றோமன் கத்தோலிக்க திருச்சபையின் சார்பாக போப் பிரான்சிஸ் பகிரங்க மன்னிப்பு கோரவுள்ளார்.

போப்பாண்டவருடன் விசேட விமானத்தில் 80இற்கும் மேற்பட்ட சர்வதேச செய்தியாளர்களும் கனடா வந்தடைந்தனர்.

இப்பயணத்தில் போப்பாண்டவர் உடல்நலம் கருதி, அவரோடு ஒரு மருத்துவரும், செவிலியரும் சென்றனர். போப் பிரான்ஸிஸ் 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணம் ஒரு தவத் திருப்பயணமாக அமைந்துள்ளது.

வட அமெரிக்காவிலுள்ள கனடாவின் பூர்வீக இன மக்களுக்கு, கடந்த காலத்தில், குறிப்பாக கிறிஸ்தவ சபைகளால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு மன்னிப்புக் கேட்கவும், அவற்றால் அவர்கள் அடைந்த மனப் புண்களைக் குணப்படுத்தவும், அந்த மக்களோடு தான் கொண்டிருக்கும் நெருக்கத்தை வெளிப்படுத்தவும், ஒரு தவப் பயணத்தை திருத்தந்தை கனடாவுக்கு



மேற்கொண்டுள்ளாரென வத்திக்கான் தெரிவித்துள்ளது.

முன்னதாக, 1870 முதல் 1990 களுக்கும் இடையில், ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்குடி குழந்தைகள் குடியிருப்புப் பள்ளிகளில் இணைய கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தப் பள்ளிகள் தேவாலயங்களால் நடத்தப்பட்டன. பழங்குடி குழந்தைகளை வெள்ளை கனடிய சமுதாயத்தில் வலுக்கட்டாயமாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறான பள்ளிகள் செயல்பட்டன.

குழந்தைகள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, பழங்குடியின மக்களின் மொழிகளைப் பேச முடியாது தடை ஏற்படுத்தப்பட்டது. மேலும் இங்கு இணைக்கப்பட்ட குழந்தைகள் பலவிதமான உடல், உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்தனர். கனடாவின் முன்னாள் குடியிருப்பு பள்ளி வளாகங்களில் ஆயிரக்கணக்கான பழங்குடிச் சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. இது இந்த விவகாரத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த அநீதிகள் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவர் பிரான்சிஸ் மன்னிப்பு கோர வேண்டும் என்ற கோரிக்கைகள் கனடாவில் வலுவடைந்தன.

இந்த விவகாரத்தில் போப்பாண்டவர் மன்னிப்புக் கோர வேண்டும் என கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கலிபோர்னியாவில் காட்டு தீ; 6,000 மக்கள் வெளியேற்றம்!

வாஷிங்டன், ஜூலை 26

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத் தீ வேகமாக பரவி வருவதால் அங்கு 6,000 இற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கலிபோர்னியாவில் யோசெமிட்டி தேசிய பூங்கா அருகே ஞாயிற்றுக்கிழமை முதல் கட்டுப்பாட்டைமீறி காட்டுத் தீ பரவிவருகிறது. இது இந்த ஆண்டில் கலிபோர்னியாவில் ஏற்பட்ட மிகப் பெரிய காட்டுத் தீயாக மாறியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைவரை காட்டுத் தீயானது 22 சதுர மைல்களுக்கு (56 சதுர கி.மீ.) காட்டை எரித்துவிட்டது. எந்த கட்டுப்பாடும் இல்லாமல் தீ எரிந்து வருகிறது. மேலும் மரங்கள் காய்ந்துள்ளதால் எளிதாக தீப் பற்றி கொள்கின்றன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீவிரமாக பரவி வரும் காட்டுத் தீ காரணமாக சுமார் 6 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்து வேறு இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். காட்டுத் தீயை அணைக்கும் பணியில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். காட்டுத் தீயை தொடர்ந்து கலிப்போர்னியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் அமைந்துள்ள யோசெமிட்டி தேசியப் பூங்கா, அங்குள்ள பிரபல சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். இந்தப் பூங்காவில் உலகின் பழமையான பல சிவப்பு மரங்கள் உள்ளன. யோசெமிட்டியின் தெற்குப் பகுதியில்தான் 3,000 ஆண்டுகள் பழமையான செக்வையாஸ் மரமும் உள்ளது. (ஐ)





## பொறிஸ் ஜோன்சன் உக்ரைனில் பயிற்சி

லண்டன், ஜூலை 26

உக்ரைன் இராணுவத்தினருடன் பிரிட்டனின் பொறிஸ் ஜோன்சன் பயிற்சியில் ஈடுபட்ட புகைப்படங்கள் வெளியாகி உள்ளன.

பிரிட்டன் பிரதமராக கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த பொறிஸ் ஜோன்சன் கடந்த 2019ஆம் ஆண்டு பதவியேற்றார். பொறிஸ் பதவி யேற்றது முதலே பல்வேறு சர்ச்சைகள் அவரை சுற்ற தொடங்கின. இதைத் தொடர்ந்து அவர் கட்சி தலைமையிலிருந்தும் பிரதமர் பதவியிலிருந்து விலகவுள்ளார். புதிய பிரதமர் பொறுப்பேற்கும்வரை அவர் இடைக்கால பிரதமராக தற்போது பதவியில் தொடர்கிறார்.

இந்நிலையில், பிரிட்டன் இராணுவத்தின் உதவியுடன் பொறிஸ் ஜோன்சன் உக்ரைன் இராணுவ வீரர்களுடன் பயிற்சி பெறும் காட்சிகள் வெளியாகி உள்ளன.

இந்தப் பயிற்சியில் போரிஸ் ஜான்சன், நவீன ஆயுதங்களை கையாளுதல், குண்டுகளை ஏறிவது போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டார். இது தொடர்பான புகைப்படங்கள் அண்மையில் வெளியாகின. (ஐ)

# பாகிஸ்தான் திணறல் ஆட்டம் பலமான நிலையில் இலங்கை!

காலி, ஜூலை 26

பாகிஸ்தானுக்கு எதிராக காலியில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி பலம்வாய்ந்த நிலையில் இருக்கிறது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இனிங்ஸில் 378 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதல் இனிங்ஸில் 7 விக்கெட்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் இருக்கின்றது.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்றுக் காலை தனது முதல் இனிங்ஸை 6 விக்கெட் இழப்புக்கு 315 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்த இலங்கை, மேலதிகமாக 63 ஓட்டங்களுக்கு எஞ்சிய 4 விக்கெட்களையும் இழந்து ஆட்டமிழந்தது.

துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த அறிமுக வீரர் துனித் வெல்லாலகே, நிரோஷன் திக்வெல்ல ஆகிய இருவரும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல் ஆட்டமிழந்தனர். நிரோஷன் திக்வெல்ல 51 ஓட்டங்களுடனும், பின்வரிசையில் ரமேஷ் மெண்டிஸ் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் நஸீம் ஷா 58 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் யாசிர் ஷா 83 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மொஹமத் நவாஸ் 80 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் தடுமாறிய போதிலும் இளம் வீரர் அகா சல்மான் பெற்ற அரைச் சதத்தின் உதவியுடன் ஓரளவு கௌரவமான நிலையை அடைந்தது.

முதல் டெஸ்டில் ஆட்டமிழக்காமல் சதம் குவித்து பாகிஸ்தானின் வெற்றியில் முக்கிய பங்காற்றி ஆட்ட நாயகனான அப்துல்லா ஷபிக் ஓட்டம் பெறாமல் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் பாபர் அஸாம் 16 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து சீரான இடைவெளிகளில் விக்கெட்களை இழந்த பாகிஸ்தான் மிகவும் இக்கட்டான நிலையில் (145 - 6 விக்.) இருந்தது. ஆனால், அகா



சல்மான், யாசிர் ஷா ஆகிய இருவரும் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடி 7ஆவது விக்கெட்டில் 46 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு கௌரவமான நிலைக்கு இட்டுச்சென்றனர்.

அகா சல்மான் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார். அவர் தவிர, இமாம் உல் ஹக் 32 ஓட்டங்களையும் முஹமட் றிஸ்வான் 24 ஓட்டங்களையும் பவாத் அலாம் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் பிரபாத் ஜயசூரிய 59 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# மேற்கிந்தியாவுக்கு எதிரான நியூசிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், ஜூலை 26

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபது - 20 போட்டிகளுக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

2014இற்கு பிறகு நியூசிலாந்து அணி மே.இ.தீவுகளுக்கு சென்று விளையாடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தத் தொடரில் முக்கியமான மூத்த வீரர்களான கேன் வில்லியம்சன், ரிம் சௌதி, டிரெண்ட் போல்ட் ஆகியோர் களமிறங்கவுள்ளனர். இவர்களுடன் டெவோன் கொன்வேயும் களமிறங்கவுள்ளார்.

நியூசிலாந்தின் தலைமை பயிற்றுவிப்பாளர் ஹாரி ஸ்டெட், "நீண்ட வருடத்துக்குப் பிறகு ஓரிடத்தில் விளையாடப்போகும்போது எப்போதும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். கடந்த வருடம் இருபது -20 கிரிக்கெட்டில் விளையாடிய பிறகு தற்போதுதான் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் விளையாடுகிறார்கள். அதனால் இந்த தொடர் முக்கியமானதாக அமையும். மேலும் சில புதிய வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது" எனக் கூறினார்.

**அணி விவரம் :**

கேன் வில்லியம்சன், பின் அலன், டிரெண்ட் போல்ட், மைக்கல் பிரேஸ்வெல், டெவோன் கொன்வே, லக்கி பெர்குசன், மார்டின் குப்தில், மாட் ஹென்றி, ரொம் லதாம், டேரில் மிட்செல், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், மிட்செல் சாண்ட்னர், இஷ் சோதி, ரிம் சௌதி.

# பாகிஸ்தான் சாதனையை தகர்த்தது இந்திய அணி!



அன்டிகுவா, ஜூலை 26

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியில் வென்ற இந்திய அணி ஒருநாள் தொடரில் ஓர் அணிக்கு எதிராக தொடர்ந்து அதிக பட்ச வெற்றிகள் பெற்று பாகிஸ்தான் அணியின் சாதனையை முறியடித்து சாதனை படைத்துள்ளது.

ஞாயிற்றுகிழமை நடைபெற்ற போட்டியில் கடைசி 10 ஓவர்களில் 100 ஓட்டங்களை அடித்து இந்திய அணி 312 ரன்களை துரத்தி த்ரில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி மே.இ.தீவுகள் அணிக்கு எதிராகத் தொடர்ந்து 12 முறை வெற்றி பெற்று புதிய சாதனைப் படைத்துள்ளது.

இதற்குமுன் பாகிஸ்தான் அணி 11 முறை தொடர்ந்து சிம்பாவே அணிக்கு எதிராக வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் தொடரில் ஒரு அணிக்கு எதிராக அதிகபட்ச தொடர் வெற்றிகள் கொண்ட அணிகளின் பட்டியல் விவரம்:

12 வெற்றிகள் - இந்தியா - மே.இ.தீவுகள் (2007-2022), 11 வெற்றிகள் - பாகிஸ்தான் - சிம்பாவே (1996-2021), 10 வெற்றிகள் - பாகிஸ்தான் - மே.இ.தீவுகள் (1999-20222), 9 வெற்றிகள் - தென்னாபிரிக்கா-சிம்பாவே (1995-2008), 9 வெற்றிகள் - இந்தியா -இலங்கை (2007-2021)



# அக்சர் பட்டேல் அதிரடி ஆட்டம் தொடரை வென்றது இந்தியா!

அன்டிகுவா, ஜூலை 26

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இரண்டு விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது இந்திய அணி.

இதில், அக்சர் பட்டேல் அதிரடியாக விளையாடி 35 பந்துகளில் 64 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் தொடரை இந்திய அணி தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இப்போது பலப்பரீட்சை நடத்துகின்றன.

இதில், இரண்டாவது போட்டியில், 312 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இந்தியா விரட்டியது. 49.4 பந்துகளில் 8 விக்கெட்கள் இழப்பிற்கு 312 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது இந்தியா. தவான் 13 ஓட்டங்களும், கில் 43 ஓட்டங்களும், சூர்யகுமார் யாதவ் 9 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 79 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்களை இழந்து தடுமாறியது இந்தியா.

இருந்தாலும் ஸ்ரேயாஷ் ஐயரும் சஞ்சு சாம்சனும் இணைந்து 99 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். ஸ்ரேயாஷ் 71 பந்துகளில் 63 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சாம்சன், 54 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். தொடர்ந்து தீபக் ஹூடா மற்றும் அக்சர் பட்டேல் 51 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் ஏற்படுத்தினர். ஹூடா 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அப்போது இந்திய அணியின் வெற்றிக்கு 56 ஓட்டங்கள் தேவைப்பட்டது. மறுபக்கம் 6 விக்கெட்களை இழந்திருந்தது இந்தியா. அக்சர் இறுதிவரை பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றி பெற செய்தார். கடைசி ஓவரின் நான்காவது பந்தில் சிக்ஸர் அடித்து வெற்றியை உறுதியை செய்தார் அவர். 35 பந்துகளில் 64 ஓட்டங்களை விளாசி இருந்தார். 3 பௌண்டரிகளும், 5 சிக்ஸர்களும் அவரின் இனிங்ஸில் அடங்கும். இடையில் தாகூர் மற்றும் ஆவேஷ் கான் தங்களது விக்கெட்களை இழந்திருந்தார்.

ஆட்டநாயகன் விருதை அக்சர் பட்டேல் வென்றார். இந்த போட்டியில் அவர் ஒரு விக்கெட்டும் கைப்பற்றியிருந்தார். இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் ஒரு போட்டி எஞ்சியிருக்க தொடரை கைப்பற்றியுள்ளது.

முன்னதாக, இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் நிக்கோலஸ் பூரண் முதலில் துடுப்பெடுத்தாடத்தைத் தெரிவு செய்தார்.

இதன்படி, 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஷாய் ஹோப் சதம் பதிவு செய்தார். 115 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பூரண் 74 ஓட்டங்கள் எடுத்தார். கெய்ல் மேயர்ஸ் 39 ஓட்டங்களும், ப்ரூக்ஸ் 35 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இந்திய அணி சார்பில் தாகூர் மூன்று விக்கெட்கள் வீழ்த்தி இருந்தார். சஹால், அக்சர் பட்டேல் மற்றும் தீபக் ஹூடா தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றி இருந்தனர்.

ஈழநாடு



# சட்டவிரோத மின்வேலியில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 26
சட்டவிரோத மின் வேலியில் சிக்கி 11 வயதுடைய சிறுவன் ஒருவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தாரெனத் தெரிய வருகின்றது.

வெல்லவாய - கொட்டவெஹெரகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த சிறுவன், அயல் வீட்டுக்குச் செல்லும்போது, மின்கம்பியில் சிக்கியுள்ளார்.

மின்சாரம் தாக்கப்பட்ட அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மின்சார வேலியை பொருத்திய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# தனிமையில் வசித்த பெண் படுகொலை!

கொழும்பு, ஜூலை 26
கண்டி, வெலம்பொடை - பழையபட்டி பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டப்பொலையை சேர்ந்த 68 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

கொலையான பெண்இ வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார். அவரின் பெண்ணின் கழுத்தில் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் இந்தப் படுகொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், வெலம்பொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிப்பாயிடம் பறிக்கப்பட்ட துப்பாக்கி மீட்கப்பட்டது!

கொழும்பு, ஜூலை 26
கடந்த ஜூலை 13ஆம் திகதி பாராளுமன்றம் அருகே இடம்பெற்ற அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவ சிப்பாய் ஒருவரிடம் இருந்து திருடப்பட்ட துப்பாக்கி இலங்கை கடற்படையினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

பத்தரமுல்லை, பொல்துவ சந்திக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவ சிப்பாயை தாக்கி ரி-56 ரக துப்பாக்கி மற்றும் சில தோட்டாக்களை திருடிச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை தியவன்னாவை பாலத்தின் அடியில் இருந்து இலங்கை கடற்படையினர் துப்பாக்கி மற்றும் வெற்று சஞ்சிகையை மீட்டுள்ளனர்.

துப்பாக்கி மற்றும் தோட்டக்கள் வெலிக்கடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாகுபாடு காட்டும் சட்டங்களை அரசு இரத்து செய்ய வேண்டும்!

*- கல்வி முறை மாற்றமும் அவசியம் என்கிறார் மஹேல -*

கொழும்பு, ஜூலை 26
**மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டும் சட்டங்களை இரத்து செய்ய வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

சட்டங்களை மாற்றுவது எவ்வளவு இன்றியமையாததோ, அதே அளவு கல்வியில் சீர்திருத்தங்கள் மூலம் மன நிலையை மாற்றுவதும் முக்கியம் என்று அறிக்கை ஒன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையின் கல்வி முறை மாணவர்களை அவர்களின் சொந்த பாலியல் நோக்குநிலை மற்றும் பாலினத்தை புரிந்து கொள்வதில் சிறந்த கல்வி மற்றும் தயார்படுத்த வேண்டும். இலங்கையில் எந்தவொரு விரி வான பாலியல் மற்றும் உறவு முறைக் கல்வியும் இல்லை. இது நாட்டில் அதிகரித்து வரும் பாலியல் வன்முறை மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடு சம்பவங்களுக்கு அடிக்கடி குற்றம் சாட்டப்படுகிறது.

குடும்பங்கள் தங்கள் LGBT+ (ஆண், பெண் உறவு கொள்ளாத ஏனையோர்) குழந்தைகளை ஏற்றுக்கொண்டு அவர் களுக்கு ஆதரவாக நிற்பதும் அவசியம் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# மக்கள் எழுச்சியின் முன்பாக ஆயுத பலம் தோற்றுபோகும்!

*பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா*

கொழும்பு, ஜூலை 26
"மக்கள் எழுச்சியின் பலத்தின் முன்பாக ஆயுத பலம் தோற்றுப்போகும். இதனால்தான் ராஜபக்ஷக்கள் தப்பியோட நேர்ந்தது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர்ந்துகொள்ள வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின்பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -



"காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராடிய போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலுக்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும். அதைவிடுத்து அவர், போராட்டக்காரர்கள் மீது பழிசுமத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்.

மக்கள் பலத்தை ஆயுத பலத்தால் ஒருபோதும் அடக்கவே முடியாது. இந்த மக்கள் பலம்தான் ராஜபக்ஷக்களை அதியுயர் பதவிகளிலிருந்து தூக்கியெறிந்தது. இதை ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்ள வேண்டும். ரணிலுக்கு எதிராக காலிமுகத்திடலில் போராடும் மக்களுக்கு எனது முழுமையான ஆதரவு தொடர்ந்தும் இருக்கும்" - என்றார். (ஐ)

# கப்ரால்மீதான தடை மேலும் நீடிக்கப்பட்டது



கொழும்பு, ஜூலை 26
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சனி டீ சில்வாவினால் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இந்த தடை நீடிக்கப்பட்டது.

இதன்படிஇ அவர் எதிர்வரும் ஒக்ரோபர் 26 ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஓ. எல். பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு மீள ஆரம்பமாகிறது

கொழும்பு, ஜூலை 26
எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருந்த க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் எல். எம். டி. தர்மசேன கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு உக்கிரமடைந்து இருந்தது. இதன் காரணமாக க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட மதிப்பீட்டு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இந்நிலையில், தற்போது விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் மீள ஆரம்பதற்கு தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் குறித்த விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. இருப்பினும், முதல்கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது - என்றார்.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறுகையில்,

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட மதிப்பீட்டு பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடைத்தாள் பணிகளில் ஈடுபட உள்ள ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொடுக்க முறையான நடைமுறையை பின்பற்றுமாறு கோரிக்கை விடுப்பதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)

# வன்முறையற்ற ஒன்றுகூடல் உரிமையை நிலைநாட்டுவோம்!

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க*

கொழும்பு, ஜூலை 26
அமைதியான மற்றும் வன்முறையற்ற ஒன்று கூடல் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இலங் கையின் அர்ப்பணிப்பை வெளிநாட்டு இராஜ தந்திர அதிகாரிகளிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் சட்டத்துக்குப் புறம்பாக தங்கியுள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றுவது தொடர்பில் விளக்கமளிக்க இராஜதந்திர அதிகாரிகளுடன் சந்திப்பு இடம்பெற்றது. அதன்போதே ஜனாதிபதி இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சிவில் லிபர்ட்டிஸ் யூனியன் வழங்கிய அறிவுறுத்தல்களில், அரச கட்டடங்களை தடுப்பதற்கும், பிற நோக்கங்களுக்காக சொத்துக்களுக்கு இடையூறு செய்வதற்கும் எதிர்ப்பாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி விளக்கினார்.

உடைமைகளுக்கும் உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்காமல் நகரத்தில் வன்முறையற்ற போராட்டங்களுக்கு இடமளிக்கப்படுவதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இராஜதந்திரிகளுக்கு விளக்கப்பட்டது.

கொழும்பில் விஹாரமாதேவி பூங்காவின் வெளி அரங்கம்இ நியூ சிட்டி மண்டபம், ஹைட் பார்க், கேம்பல் பிட்டிய என அனைத்து வசதிகளும் அகிம்சை வழியிலான போராட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

காலி முகத்திடல் போராட்ட களத்தை படையினர் அகற்றவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## பேஸ்புக்கில்....

சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், சந்தேகநபரை மன்றில் முற்படுத்திய மாத்தறை கணனி குற்றப் பிரிவினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்தே அவரை எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்....

இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாளை (இன்று) முதல் இலங்கை போக்குவரத்து சபையின் சாலைகளில் யாழ். மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையில் எரிபொருளை பெற்றுத்தர அரச அதிபரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் தனியார் பேருந்துக ளை நாளை (இன்று) முதல் இயக்க தீர்மானித்துள்ளோம் - என்றார்.

எரிபொருள் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக நேற்று தனியார் பேருந்துகள் உள்ளூர் மற்றும் வெளியூர் சேவைகளில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களின்....

நிறைவேற்றியவர்கள் அல்லர். இவ்வாறானதொரு நிலையில் அவர்களின் தயவுடன் ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கூறுவதை எந்த அடிப்படையில் நம்பலாம்?" - என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது பதவிக் காலத்துக்குள் அரசியல் தீர்வு காண்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதேபோன்று, தமிழ் மக்களின் பிரச் னைக்குத் தீர்வு காண்பதற்கு ரணில் அர சைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பவேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில், ரணில், தினேஷ் ஆகியோரின் கருத்து தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வாயால் வாக்குறுதிகளை வழங்குவதில் ராஜபக்ஷக்களும் அவர்களின் கட்சியினரும் வல்லவர்கள். ஆனால், அவர்கள் வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. தேர்தல் காலங்களில்கூட சிங்கள மக்களுக்கு ராஜபக்ஷக்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால்தான் அவர்களுக்கு வாக்களித்த மக்களே அவர்களை விரட்டியடிக்க வீதிக்கு வந்தனர்.

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் இருந்து ராஜபக்ஷக்கள் விலகினாலும் தற்போது அந்தப் பதவிகளுக்கு அமர்த்தப்பட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் ராஜபக்ஷக்களின் கட்சியினரின் ஆதரவுடன்தான் செயல்படுகின்றார்கள்.

எனவே, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான தீர்வுகள், இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் புதிய ஜனாதிபதியும் புதிய பிரதமரும் வாயால் சொல்வதைச் செயலில் நிறைவேற்ற சிறீலங்கா பொதுஜன முன்னணியினர் ஆதரவு வழங்குவார்களா என்பது கேள்விக்குறியே.

புதிய ஜனாதிபதியினதும் புதிய பிரதமரினதும் செயல்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரான நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நாட்டின் நலன் கருதி - எமது மக்களின் நலன் கருதி நல்ல கருமங்களை அவர்கள் முன்னெடுத்தால் அவற்றுக்கு நாம் பூரண ஆதரவை வழங்குவோம்" - என்றார். (ஐ)

## பரவுகிறது...

கட்டுப்படுத்தும் வகையில் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

அவசியமற்ற ஒன்றுகூடல்கள் மற்றும் நடமாட்டங்களை கட்டுப்படுத்தி, சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

இதேவேளை, பொது இடங்களுக்குச் செல்லும்போதும் பயணத்தின்போதும் முகக்கவசத்தை அனைவரும் அணிய வேண்டும். நாட்டில் மீண்டும் கொரோனா பரவும் அபாயம் காணப்படுகிறது. பரவலைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் - சுகாதார வழி காட்டுதல்களை மக்கள் தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## போக்குவரத்து...

நடத்திய புறக்கணிப்பு போராட்டம் மற்றும் தனியார் பேருந்துகளின் சேவை நிறுத்தம் என்பவற்றாலும், எரிபொருள் நெருக்கடி முழுமையாக தீராததும் மாணவர்களின் வருகையை பாதித்தன. அத்துடன், மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களையும் எதிர்கொண்டனர்.

எனினும், கிராமப்புற பாடசாலைகளில் ஓரளவுக்கு அதிகளவில் மாணவர்களின் வரவு காணப்பட்டது.

இதேசமயம், வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்திலும் இ. போ. ச. சாலை ஊழியர்களின் புறக்கணிப்பு போராட்டத்தால் மாணவர்களின் வருகை குறைவாக காணப்பட்டதுடன், அவர்கள் பெரும் சிரமங்களையும் எதிர்கொண்டனர்.

எனினும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலைகள் வழக்கம் போன்று இயங்கின. எனினும், மாணவர்களின் வருகையில் சற்று வீழ்ச்சி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பருத்தித்துறை....

போராட்டம் நேற்று பிற்பகல் வரை தொடர்ந்திருந்தது. இதனால், எந்த சேவைகளும் இடம்பெற வில்லை. இதேநேரம், யாழ். மாவட்ட தனியார் பேருந்து சேவையினரும் நேற்று சேவையை நிறுத்தியிருந்தமையால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

பருத்தித்துறை சாலையிலிருந்து கொழும்பு சென்ற பேருந்தை வென்னப்புவ - மாரவில பகுதியில் வாகனத்தில் கத்தி, பொல்லுகள் போன்ற ஆயுதங்களுடன் வந்தவர்கள் வழிமறித்து நிறுத்தி யுள்ளனர். பேருந்திலிருந்து நடத்துநரை கீழே இறக்கியவர்கள் பேருந்திலிருந்து வேறு எவரையும் கீழே இறங்க முடியாத வாறு கதவுகளை பூட்டிவிட்டு அவரைத் தாக்கியுள்ளனர். இதன்பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் நடத்துநரால் மாரவில பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கு காரணமானவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று கோரியே நேற்று அதிகாலை முதல் பருத்தித்துறைசாலையினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில், இன்றைய தினமும் இந்தப் போராட்டம் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தனியார் பேருந்துகள் நேற்றைய தினம் இயங்காது என்று அறிவிக்கப்பட்டபோதிலும், பருத்தித்துறை சிற்றூர்தி சங்கத்தினர் மக்களின் நன்மை கருதி பேருந்துகளை இயக்கினர். ஆனால், சில பேருந்து சேவைகளுடன் அவையும் நிறுத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ- 2)

# மக்களின் ஆணை இரத்து; தேர்தலை நடத்துங்கள்!

## முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் மக்கள் வழங்கிய ஆணை இரத்தாகி விட்டது என்றும் உடனடியாக தேர்தலை நடத்துமாறு முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் வழங்கிய ஆணை தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தி புதிய தேர்தலுக்கு வழி வகை செய்ய வேண்டும்.

ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கான செலவை ஏற்க நிறுவனங்கள் இருக்கின்றன. அதற்கு ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும்.

எந்தவொரு கொடுப்பனவும் பெறாமல் தேர்தல் கடமைகளில் ஈடுபடத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தலை நடத்துவது பெரிய பிரச்னையாக இருக்காது - என்றார் அவர். (ஐ)

# சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய அழைப்பு இல்லை!

## தமிழ், முஸ்லிம் கட்சிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

சர்வகட்சி ஆட்சியில் பங்கேற்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவர் ரிசாத் பதியுதீனிடம் நாம் கேட்ட போது, அவ்வாறான அழைப்பு இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்தார்.

அவ்வாறானதோர் அரசாங்கம் அமைவதை ஊடகங்களில் இருந்தே தான் பார்த்தாரெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரனிடம் வினவிய போது, அனைத்து கட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அழைப்பு கிடைத்ததும் அத்தகைய அரசில் இணைவதா என்பது குறித்து பரிசீலிப்பேன் -என்றார்.

இதேபோல, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், "அவ்வாறான அழைப்பு எதுவும் இதுவரை வரவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டதன் பின்னர், பாராளுமன்ற கட்சித் தலைவர்களை சந்தித்த போது, அவ்வாறானதோர் அரசாங்கம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார் என்றும் கூறினார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் கூறுகையில், அழைப்பு கிடைக்கவில்லை. கிடைத்த பின்னர் கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

## பிளவடைகின்றது....

இந்நிலையில், சர்வகட்சி அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி இணையாது விடினும் அந்தக் கட்சியை சேர்ந்த சில எம். பிக்கள் அரசுடன் இணைய சம்மதம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் நடந்த இரகசிப் பேச்சு வெற்றி பெற்றுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே, ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த 8 பேருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்தவர்களே அரசுடன் இணையத் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இதேசமயம், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளிலிருந்தும் அரசாங்கத்துடன் இணைவதற்கு பேச்சுக்கள் இடம்பெறுகின்றன எனவும் இந்தப் பேச்சுக்கள் அரச தரப்புக்கு சாதகமாகவுள்ளன என்றும் 15 நாட்களில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## சுமந்திரன்....

முன்னதாக - மிக நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் இந்தச் சந்திப்பு ஏன் நடந் தது? என்ன பேசப்பட்டன? போன்ற விடயங்கள் வெளியாகவில்லை. (ஐ -சி)

## போராட்டங்களின்...

மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார். இலங்கையில் போராட்டங்கள் வன்முறையாக மாறியமையால் கிளர்ச்சியாளர்களை விரும்பாத நிலையில், இலங்கையர்களுக்கு கிடைக்கவேண்டிய தொழில்வாய்ப்புக்கள் கிடைக்காமல் போயுள்ளன. அவை ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இன்று இலங்கைக்கு அரசியல் ஸ்திரத்தன்மையும் சமாதானமுமே தேவை. கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்கள் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற முனைந்தால், அவர்கள் நிராயுதப்படுத்தப்படுவார்கள் - என்றும் அவர் கூறினார்.

## அமைச்சு...

அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டால் பெரிய பாதிப்பு எமக்கு ஏற்படும். அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் போது கூட்டுப் பொறுப்புடைமை மற்றும் கடப்பாடு போன்றன இருக்கின்றன. அதனடிப்படையில் அவர்கள் எமக்கு கூறுவதை நாம் செய்ய வேண்டியிருக்கும். செய்யாதவிடத்தில் அதிலிருந்து வெளியேற வேண்டிவரும். பெரும்பான்மையினர் இருக்கும் போது சிறுபான்மையினருக்கு எந்த ஒரு செயல்பாட்டையும் செய்யமாட்டார்கள். பெரும்பான்மை மக்களுக்கு ஏற்றவாறே செயல்பட பார்ப்பார்கள்.

"இதன் காரணமாக அமைச்சரவை சம்பந்தமாக நான் அவ்வளவாக மனதில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு பொருளாதார ரீதியாக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது சம்பந்தமான சில கட்டமைப்புகளை அமைக்க உதவிகளை அரசாங்கத்திடம் இருந்து பெறவுள்ளேன்.

"நான் வட மாகாண முதலமைச்சராக இருந்த போது முதலமைச்சர் நிதியத்தை உருவாக்க அனுமதி தரவில்லை. இன்னமும் அதேபோல இருக்காமல் வட, கிழக்கில் சட்ட ரீதியான நிதியத்தை ஏற்படுத்தி வெளிநாடுகளில் இருந்து முதலீடுகளைப் பெற்று அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். ஆகவே தற்போது அமைச்சுப் பதவியை நான் பெரிதாகக் கருதவில்லை - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 82 போத்தல்கள் கசிப்புடன் தருமபுரத்தில் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சியில் 82 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, 82 போத்தல் கசிப்பு மற்றும் 238 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவும், இடியன் துப்பாக்கி ஒன்றையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

அத்துடன், இவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் பிடிக்கப்பட்டவர் தருமபுரம் பொலிஸாரிடம் சான்றுப் பொருட்களுடன் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# காலிமுகத்திடல் தாக்குதல் சர்வதேச விசாரணை தேவை!

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, ஜூலை 26

இலங்கையில் புதிய ஜனா திபதியாக பதவியேற்ற 24 மணி நேரங்களுக்குள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது, படையினரும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் கடுமையான தாக்கு தல்கள் நடத்தக் காரணமான புதிய அரசிடம், ஒரு வெளிப்படையான விசாரணையை தொடங்க வேண் டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சர்வதேசத் திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜூலை 22, வெள்ளிக்கிழமை அதிகாலையில், கொழும்பில் அரசுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்தியவர்கள் மீது, படையினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிரான தன் வன்மையான கண்டனத்தையும், கொழும்பு பேராயரான கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் முகாம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவி இளையோர், அந்த முகாமை விட்டுச் செல்வதற்கு தயாராகி வருகிறோம் என்று அறிவித்த பின்னர் அவர்கள்மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்று, சர்வதேச சமூகத்திடம் தெரிவிப்பதாகக் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் மட்டுமே ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளவர், நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாக்க வேண்டும், அதற்கு மாறாக, ஒரு மக்களாட்சி நாட்டில், போராட்டம் நடத்துவதற்கு அடிப்படை உரிமையை கொண்டுள்ள மக்களுக்கு எதிராக அவர் செயல்பட்டுள்ளார் என்று, கர்தினால் மல்கம் ரஞ்சித் கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையால் வருங் காலத்தில் இடம்பெறும் எதிர் விளைவுகளுக்கு அரசுத் தலைவரே குற்றம்சாட்டப்படுவார் என்பதையும், கர்தினால் ரஞ்சித் நினைவுபடுத்தியுள்ளார். (ஐ)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புதிய வீடு சகல தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு.
சிறிய குடும்பம் அல்லது அலுவலக பாவனைக்கும் உகந்தது.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

**தொடர்புகளுக்கு: 0772203140**

# எரிபொருள் இறக்குமதிக்கு ஒரு வருடத்துக்கு கட்டுப்பாடு!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன



**கொழும்பு, ஜூலை 26**

**அந்நிய செலாவணி சிக்கல்கள் காரணமாக, அடுத்த ஒரு வருடத்துக்கு எரிபொருள் இறக்குமதியை கட்டுப்படுத்த நேரிடும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று தெரிவித்தார்.**

நாடளாவிய ரீதியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ. ஓ. சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்று முதல் தேசிய எரிபொருள் அனுமதி (கியூ. ஆர்) முறைமை அமுல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்துக்கு அமைய எரிபொருள் வழங்கும் முறைமை ஓகஸ்ட் முதலாம் திகதிவரை தொடரும் என்றும் அதன் பிறகு முழுமையாக கியூ. ஆர். முறைமை மாத்திரம் அமுலாகும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அந்நிய செலாவணி சிக்கல்கள் காரணமாக, அடுத்த 12 மாதங்களுக்கு எரிபொருள் இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

எரிபொருள் இருப்பு வரம்பற்றதாக இருந்தாலும் நடைமுறையில் எரிபொருள் நிலையங்களுக்கான நாளாந்த விநியோகம் சாத்தியமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலா, கைத்தொழில் மற்றும் சேவை வழங்கும் துறைகளுக்கு, தங்களது வாகனங்களை அனுமதிச்சீட்டு முறைமையில் பதிவு செய்வதற்கான அமைப்புக்கு அனுகல் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# “இரகசிய வாக்கெடுப்பு தேர்தலுக்காக பணம் கொடுக்க ரணில் முட்டாளல்ல!”

கொழும்பு, ஜூலை 26

இரகசிய வாக்கெடுப்பு நடக்கும் ஒரு தேர்தலில் தனக்கு வாக்களிப்பதற்காக பணம் கொடுக்கும் அளவுக்கு ரணில் விக்கிரமசிங்க ஒரு முட்டாள் அல்ல என்று அரசியல் அவதானி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் எம். பிக்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தரப்பிலிருந்து பெருந்தொகையான பணம் வழங்கப்பட்டதாக வெளிவந்த செய்திகள் தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்கே துரோகம் செய்ய தயங்காத ஒருவர் தன்னிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு இரகசிய வாக்கெடுப்பில் தனக்கே வாக்களிப்பார் என்று நம்புகிற அளவுக்கு ரணில் இருக்கமாட்டார் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# டீசல் வைத்திருந்த குற்றத்தில் கைதான வர்த்தகர் விடுதலை

கொழும்பு, ஜூலை 26

385 லீற்றர் டீசலை கையிருப்பில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வர்த்தகர் ஒருவரை விடுதலை செய்த மஹர மேலதிக நீதிவான் திருமதி ஜனனி பெரேரா, குறித்த வர்த்தகரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட டீசல் கையிருப்பை சப்புகஸ்கந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

பெற்றோலிய சட்டத்தில் டீசல் வைத்திருப்பது குற்றம் என்று குறிப்பிடப்படாததால், பொலிஸார் தங்கள் கட்சிக்காரர்மீது வழக்குப்பதிவு செய்ய முடியாத நிலையில், வழக்கு பதிவு செய்யாமல் அவரை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி பிரதீப் கமகே விடுத்த கோரிக்கையை நீதிவான் ஏற்று அவரை விடுவித்தார்.

மேலும், அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டீசல் கையிருப்பை சட்டத்தரணி கமகே திருப்பித் தருமாறு கூறினார். எனினும், பெற்றோலிய பொருட்களை அருகில் வைத்திருப்பது குற்றம் என்ற சட்டத்துக்கு அமைய அந்த எரிபொருளை மீளளிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

# பருவச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க இடமளியோம்!

## ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள்

கொழும்பு, ஜூலை 26

பொது பயணிகளை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் புகையிரத மாதாந்த பருவச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்க முடியாது. புதிய கட்டண திருத்தத்துக்கு அமைய பருவச்சீட்டு கட்டண அதிகரிப்பு நூற்றுக்கு பன்மடங்கு அதிகரிக்கப்படவுள்ளமை நியாயமற்றதாகும் என்று ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேச சோமரத்ன தெரிவித்தார்.

மருதானை ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ரயில் திணைக்களம் முறையான வழிமுறைகளுக்கமைய புதிய கட்டண திருத்தத்தை ஆரம்பத்தில் தயார் செய்யவில்லை.

பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை தொடர்ந்து போக்குவரத்து அமைச்சின் செயலாளருடன் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பேச்சின்போது இந்த குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டது.

எரிபொருள் விலையேற்றத்தை கருத்திற்கொண்டு ரயில் சேவையின் சாதாரண பயணச்சீட்டு கட்டணங்கள் மாத்திரம் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச கட்டணம் 20 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், மாதாந்த பருவச்சீட்டு கட்டணம் பன்மடங்கு அதிகரிக்கப்படவுள்ளன. உதாரணமான தற்போது 2,980 ரூபாயாகக் காணப்படும் பருவச்சீட்டுக்கான கட்டணம் எதிர்வரும் மாதம் முதல் 6,000 ரூபாயாக நிர்ணயிக்கப்படவுள்ளன.

மாதாந்த பருவச்சீட்டு கட்டணத்தை இவ்வாறு முறையற்ற வகையில் அதிகரிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து பெரும்பாலானவர்கள் ரயில் சேவையை பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். இவ்வாறான நிலையில் ரயில் கட்டணத்தையும் அதிகரித்தால் பொது பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி மாளிகையில் திருடிய மூவர் கைதாகினர்!

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி மாளிகையில் இருந்து திருடப்பட்ட பழங்கால பொருட்களுடன் 3 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கள் எழுச்சிப் போராட்டத்தையடுத்து ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

இந்நிலையில், ஜனாதிபதி மாளிகையின் யன்னல்களில் பொருத்தப்பட்டிருந்த பித்தளையால் செய்யப்பட்ட 40 பந்து வடிவிலான உருண்டைகளை திருடிய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட 40 பித்தளை உருண்டைகள் நேற்றுமுன்தினம் பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவருக்கு விற்க முயன்றபோதே மூவரும் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன், பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - இரும்புத்திரை, அன்றி இன்டியன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா



6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவ ஒளி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு